விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினெட்டு

சாங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 ஆடி 13 வியாழக்கிழமை (29.07.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 222

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# இராணுவத்தால் நிலங்கள் அபகரிப்பு; குடியிருக்க இடமின்றி மக்கள் பரிதவிப்பு

## முறிகண்டியில் தொடரும் அவலம்

(கிளிநொச்சி)

இராணுவத் தேவைக்காக நிலங்கள் கையகப்படுத்தப்படுவதால், போரின் காரணமாக இடம்பெயர்ந்த ஆயிரக் கணக்கான மக்கள் தமது சொந்த இடங்களுக்குத் திரும்புவது கேள்விக் குறியாகியுள்ளது. முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்ட நிர்வாகப் பிரிவுகளுக்கு உட்பட்ட ஏ-9 வீதியின் கிழக்குப் பகுதியிலுள்ள முறிகண்டி, இந்துபுரம் மற்றும் சாந்தபுரம் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்துள்ள மக்களே இப்படியான சிக்கலில் மாட்டியுள்ளார்கள். (18 ஆம் பக்கம் பார்க்க)

## யசூசி அகாசியுடன் இலங்கைக் குழு பேச்சு

(கொழும்பு)

யப்பானுக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டிருக்கும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் யப்பானின் இலங்கைக்கான சமாதானத் தூதுவர் யசூசி அகாசியை அங்கு நேரில் சந்தித்து உரையாடியுள்ளனர்.

இலங்கையின் போருக்குப் பிந்திய அபிவிருத்திப் பணிகள் குறித்து இப் பேச்சுக்கள் அமைந்தன.

யப்பானுக்கான இலங்கைத் தூதரகம் இச் சந்திப்புக் குறித்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (ச-5)

## பிரிகேடியர்கள் ஐவருக்குப் பதவியுயர்வு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் சிரேஷ்ட பிரிகேடியர்கள் ஐவர், மேஜர் ஜெனரல்களாகப் பதவியுயர்த்தப்பட்டுள்ளதாக இராணுவச் செயலகம் அறிவித்துள்ளது.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் யூ.ஏ.பி. மெதவலவும் பதவியுயர்த்தப்பட்டவர்களில் ஒருவராவார்.

பிரிகேடியர்களான 52-வது படையணியின் முன்னாள் கட்டளைத் தளபதி எஸ்.ஏ.ஏ.எல்.பெரேரா, ஈ.கே.ஜே.கே.விஜேசிறி, வி.யூ.பி.நாணயக்கார, எம்.எச்.எஸ்.பி.பெரேரா ஆகியோரும் மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர். (ச-5)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திக்க தமிழ்க் கட்சிகளின் ஒன்றியம் தீர்மானம்

### விரும்பும் இடத்தில் பேசவும் இணக்கம்

(கொழும்பு)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான தமிழ்க் கட்சிகள் நேற்றுக் கொழும்பில் கூடி இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும் நடைமுறை விடயங்கள் குறித்து ஆராய்ந்தனர்.

இதன்போது தமது கலந்துரையாடலில் ஒரு ஏகமனதான தீர்மானத்தை எட்ட வேண்டும் என்ற கருத்தை அனைத்துத் தலைவர்களும் ஏற்றுக் கொண்டதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இதேவேளை அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் முன்னெடுக்கும் இந்த முனைப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பங்கேற்க வேண்டும் என்ற விருப்பத்தை அனைத்துக் கட்சிகளும் வெளியிட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

எனவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, அது விரும்பும் இடத்தில் சென்று சந்திப்பதற்கு நேற்றுக் கூடிய கட்சிகள் யாவும் இணக்கத்தை வெளியிட்டன.

இந் நிலையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்திப்பதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தி (18 ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் 792 ஆசிரியர்களுக்கு 3ஆம் தவணையில் இடமாற்றம்

(திருகோணமலை)

வன்னிக் கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடமையாற்றும் 232 ஆசிரியர்கள் யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் ஆகிய மாவட்ட கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.

அத்துடன் யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் மாவட்ட கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளில் கடமையாற்றும் 560 ஆசிரியர்கள் வன்னிக் கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.

இத் தகவலை (18 ஆம் பக்கம் பார்க்க)

## நாட்டில் டெங்கு மரணம் நிகழ்ந்தால் அதிகாரிகள் மரத்துடன் கட்டப்படுவர்!

### அமைச்சர் மேர்வின் எச்சரிக்கை

(கொழும்பு)

டெங்குக் காய்ச்சலால் அடுத்த மாதம் முதல் எவராவது மரணமடைவார்களாக இருந்தால் அம் மரணத்தைத் தடுக்கத் தவறிய மக்கள் பிரதிநிதிகளையும் உத்தியோகத்தர்களையும் மரத்தில் கட்டிப்போடுவேன் என்று பெருந்தெருக்கள் பிரதியமைச்சர் மேர்வின் சில்வா பகிரங்கமாக அறிவித்துள்ளார்.

அவர் கொழும்பில் நேற்று ஊடகவியலாளர்களைச் சந்தித்து உரையாடியபோதே இவ்வாறு தெரிவித்தார். அவர் டெங்கு நோய்த் தடுப்புத் தொடர்பாகப் பேசுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

அடுத்த மாதம் (18 ஆம் பக்கம் பார்க்க)

## மருத்துவமாது தர்ஷிகாவின் சடலம் கொழும்புக்கு நேற்று அனுப்பிவைப்பு

(யாழ்ப்பாணம்)

வேலணை வைத்தியசாலையின் குடும்ப நல மருத்துவ உத்தியோகத்தராக கடமையாற்றியபோது மர்மமான முறையில் மரணமான தர்ஷிகாவின் உடல் நேற்று மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டுக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது.


ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதி இரா. வசந்தசேனன், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை, யாழ்ப்பாணம் ஆகிய பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகள், யாழ்.போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி, கைதடி கிராம அலுவலர், மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் ஆகியோர் முன்னிலையில் நேற்றுக் காலை 8 மணியளவில் சடலம் புதைக்கப்பட்ட இடத்திலிருந்து தோண்டியெடுக்கப்பட்டது.

தோண்டியெடுக் (18 ஆம் பக்கம் பார்க்க)



குடும்பநல உத்தியோகத்தர் தர்ஷிகாவின் சடலம் நீதிபதி முன்னிலையில் தோண்டியெடுக்கப்படுவதையும் தோண்டியெடுக்கப்பட்ட சடலத்தையும் படங்களில் காணலாம்.


## அலரி மாளிகையில் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க!



உலகின் முதல் பெண் பிரதமராக ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க தெரிவு செய்யப்பட்டு 50 ஆண்டுகள் பூர்த்தியாகியமையை முன்னிட்டு அலரி மாளிகையில் நேற்று விசேட வைபவம் ஒன்று இடம் பெற்றது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இவ்வைபவத்திற்குத் தலைமை தாங்கினார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்டனர். அம்மையாரின் உருவப்படத்திற்கு ஜனாதிபதியும் பிரமுகர்களும் மாலைசூட்டிக் கௌரவித்தனர். (ச-5)

# பனம் களியை பிரித்தெடுப்பதற்கான நவீன இயந்திரம் கையளிப்பு





(யாழ்ப்பாணம்)

தேசிய பொறியியல் ஆராய்ச்சி அபிவிருத்தி நிலையமும் பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து பனம் பழத்திலிருந்து பனம் களியை பெறுவதற்காக வடிவமைக்கப்பட்ட நவீன இயந்திரத்தை முதல் தடவையாக யாழ்.பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்தி நிலையததில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கை பொறியியல் ஆராய்ச்சி நிலையத்தின் பொறியியலாளர் மாலி ரணதுங்க பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் பசுபதி சீவரட்ணத்திடம் நேற்று முன்தினம் இவ் இயந்திரத்தை கையளித்தார்.

இந்த இயந்திரத்தின் மூலம் பனம் பழத்திலிருந்து பனம் களியை குறைந்த நேரத்தில் பெற முடியும் என்பதுடன் 30கிலோ பனம் பழத்திலிருந்து 15 நிமிடத்தில் அதிகளவான பனம் களியை கழிவு இன்றி பெற்றுக்கொள்ள முடியும்.

இதன் மூலம் இலங்கை பூராக இம்முறை அதிகளவு பனம் களியை உற்பத்தி செய்வதோடு சந்தைப்படுத்தல் வசதியும் ஏற்படுத்தப்படும் என நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இவ் இயந்திரத்தின் பெறுமதி ஒரு இலட்சத்து 27 ஆயிரம் ரூபாய் எனவும் யாழ் மாவட்ட பனை அபிவிருத்திச் சபையின் உற்பத்தி நிலையத்திற்கு முதற்கட்டமான 6 இயந் திரங்கள் கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை யாழ் மாவட்டத்தில் பனை வள உற்பத்தியை மெருகூட்டுவதற்காக இந்தியாவிற்குப் பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார். (4-7)

# வாக்காளர் பதிவுகளை இன்றே விரைந்து செய்வோம்

18 வயதிற்கு மேற்பட்டவர்கள் தம்மை வாக்காளராகப் பதிவு செய்து கொள்வது, பல்வேறு அந்தஸ்துக்களை தனக்கும் சமூகத்திற்கும் எதிர்கால சந்ததியினருக்குமான முக்கிய நடவடிக்கையாகும்.

இலங்கையில் மொத்த சனத்தொகையில் 4 சதவீதத்தினர் கல்வி அறிவுடையோர், சொத்துடையோர் என்ற அடிப்படையில் 1910களில் வாக்குரிமை பெற்றிருந்தனர். இவர்கள் சமூகத்தில் உயர்வுடையோராக கருதப்பட்டனர்.தமிழ் மக்களே பிரதேச ரீதியாக அதிக வாக்குரிமையுடையோராக இருந்தனர் என்பது பெருமை தரக்கூடியதாகும்.

ஆனால் இன்று வாக்குரிமை பற்றி அதிகளவிலோ சிறியளவிலோ அன்றி எந்தளவிலும் அக்கறை காட்டாதவர்களாக தமிழ் மக்கள் இருக்கின்றனர்.

வாக்காளர்களாகப் பதிவு செய்வது நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கானதென்ற நினைப்பும்,இவர்களுக்கு வாக்களித்தென்ன பயன் என்ற முடிபும் வாக்காளர்களாகத் தங்களைப் பதிவு செய்து கொள்வதில் தமிழ் மக்கள் பின்னடிக்கின்றனர்.

ஆனால் உண்மையில் வாக்காளர்களாகப் பதிவு செய்வதன் மூலம் வதிவிடத்தை உறுதிப்படுத்தவும்,பல்கலைக்கழக அனுமதி, இனவாரியான வேலைவாய்ப்பு என்பவற்றுக்கும் வாக்காளர் பதிவு மிகவும் அவசியம். அதேநேரம் மாவட்டங்களாகப் பிரிப்பதற்கும் பதிவு உதவுகிறது.

எனவே நாளைய தினத்துடன் முடிபுறும் வாக்காளர்களைப் பதிவு செய்யும் பணியை விரைவாகச் செய்ய தமிழ் மக்கள் முன்வர வேண்டும்.

இதற்கு அந்தந்த பிரதேச செயலகங்கள் காத்திரமான பணியை முன்னெடுக்க வேண்டும்.

வாக்காளர் பதிவில் எங்கள் மக்களை கரிசனை கொள்ளச் செய்யும் தார்மீகப் பொறுப்பு கிராம உத்தியோகத்தர்களுக்கு நிறையவே உண்டு.

ஆக,நாளைய தினத்திற்கு முன்னதாக வாக்காளர் பதிவை மேற்கொள்ள அனைவரும் தயாராக வேண்டும்.

- சிறி

# உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

துளசிதாசன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்திற்கான கலட்டி ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று வியாழக்கிழமை மாலை 3.30மணிக்கு யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சென் சேவியர் விளையாட்டுக் கழக அணியும் மாலை 4.30மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் வல்வை விளையாட்டுக் கழகத் தை எதிர்த்து உதயதாரகை விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன. (ச-4)

# சிமிக் வெற்றிக்கிண்ணத்துக்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

சிமிக் வெற்றிக் கிண்ணத்திற்கான 20 பந்து பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டச் சுற்றுப் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

யாழ்ப்பாணம் பாதுகாப்புப் படை தலைமைச் செயலகமும் யாழ் மாவட்ட துடுப்பாட்ட சங்கமும் இணைந்து இப் போட்டியினை நடத்தவுள்ளன.

இச் சுற்றுப் போட்டியில் 22 அணிகள் பங்குபற்றுகின்றன. யாழ் மாவட்ட துடுப்பாட்ட சங்கத்தில் அங்கத்துவம் பெற்ற 13 அணிகளும் அங்கத்துவத்துக்காகக் காத்திருக்கும் 5 அணிகளும் அங்கத்துவம் இல்லாத 3 அணிகளும் பங்குபற்றுகின்றன.முதல் 11 அணிகளும் மேல் பிரிவிலும் மிகுதி 11 அணிகளும் கீழ் பிரிவிலும் போட்டியிடவுள்ளன.

முதல் இரு போட்டிகளும் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும். முதலாவது போட்டி காலை மட்டுவில் வளர்மதி அணிக்கும் வல்வெட்டித்துறை ஈகிள்ஸ் அணிக்கும் நடைபெறவுள்ளது.

2வது போட்டி யாழ்.ஜெனியன்ஸ் அணிக்கும் திருநெல்வேலி கிறிக்கற் கழக அணிக்கிடையிலும் நடைபெறும்.

3வது,4வது போட்டிகள் சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. 3 வது போட்டி ஜெலிஸ்ரார் அணிக்கும் மானிப்பாய் பரீஸ் அணிக்கும் காலை நடைபெறவுள்ளது. 4 வது போட்டி பற்றீசியன் அணிக்கும் யாழ்.பல்கலைக்கழக அணிக்கும் இடையில் மாலை நடைபெறவுள்ளது. 5 வது, 6வது போட்டிகள் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. 5 வது போட்டி ஸ்ரான்லி அணிக்கும் இராணுவ அணிக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

6 வது போட்டி யாழ்.சென்றல் அணிக்கும் யூனியன்ஸ் அணிக்கும் இடையில் மாலை நடைபெறவுள்ளது. போட்டிகள் யாவும் விலகல் முறையில் நடைபெறும். போட்டியில் முதலாம் இடத்தை அடையும் அணிக்கு 30 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் வழங்கப்படவுள்ளது. (சு)


### அறிவித்தல்
### யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றில்

குடியியல் நடவடிக்கை முறைக் கோவையின் 528ம் பிரிவின் கீழான விண்ணப்பம்.

மரணசாதனமில்லா மரணச் சொத்துக்கள் சம்பந்தமான விடயத்தில்

வழ.இல:தத்துவம்/4/10

1. சுப்பையா பூமாலைராசா
திருத்தணிகை நவாலி றோட்
ஆனைக்கோட்டை
– மரணமடைந்தவர்–

பூமாலைராசா நந்தகுமார்
திருத்தணிகை நவாலி றோட்
ஆனைக்கோட்டை.
– மனுதார்–

இவ் வழக்கு மேற்குறித்த மனுதாரரினால் மேற்குறித்த மரணமடைந்தவரின் மரணச் சொத்துக்களை நிர்வகிப்பதற்காக இம்மன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையால் யாராவது ஆட்சேபனை இருப்பின் இந் நீதிமன்றில் 2010ம் ஆண்டு ஐப்பசி மாதம் 14ம் திகதி இம்மன்றில் காலை 9.00 மணிக்கு சமுகமளித்து தெரிவிக்குமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றீர்கள்.

2010.07.15
வரைவு.

மனுதார் சட்டத்தரணி

மன்றின் கட்டளைப்படி
க.மகாலிங்கம்
பதிவாளர்
REGISTRAR
DISTRICT COURT
JAFFNA

(2040)

### வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Innovage சர்வதேச நிறுவனத்திற்கு முகாமை பயிற்சியாளர்கள் தேவை. Marketing Management,Business Management Peoples Management ஆகிய துறைகளுக்கு பயிற்சியாளர்கள் தேவை.
பயிற்சியின்போது அடிப்படைச் சம்பளம் ரூபா 5750/= +கொமிசன் வழங்கப்படும். 15 பேர் மட்டுமே தேவை. தகைமை O/L, A/L

தொடர்புகளுக்கு: 021 4900001
021 4900350
021 49 05001

(2038)

### வாடகைக்கு அறை தேவை

யாழ்.நகரப் பகுதியில் சிங்களம் கற்பிப்பதற்கு அறை ஒன்று தேவை. (பத்துப்பேர் அமர்ந்து கற்கக்கூடிய வசதி இருத்தல் விரும்பத்தக்கது)

தொடர்புக்கு :
0772283940

(2035)

### அஞ்சலிக்கிறோம்!

வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமியின் அன்புக் கணவர் **அமரர் கணேசலிங்கம் றமேஸ்** (உதவி பிரதம பொலிஸ் பரீட்சகர்) அவர்களது மரணச் செய்திகேட்டு அதிர்ச்சியும் கவலையும் அடைந்துள்ளோம்.

அன்னாரின் மறைவினால் துயருருவோருடன் இணைந்து நாமும் துயர் பகிர்ந்து அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

மாநகர முதல்வர்,
மாநகர பிரதி முதல்வர்,
கௌரவ அங்கத்தவர்கள்,
மாநகரசபை உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

(C-765)

22.07.2010 முதல்

ஸ்ரீகாந், பிருத்விராஜ், கமாலினிமுகர்ஜி மற்றும் பலர் நடிப்பில்




செல்லா சினிமா(நாதன்ஸ்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
காட்சி நேரம்:- 10.30,2.30,6.00,9.00

# இன்று ஒரு தகவல்

## உழைப்பின் பெருமை

ரயில் நிலையத்தில் ஒருத்தர் காலாற நடந்து வந்து கொண்டிருந்தார்.

அவர் வீட்டில் பல மணிநேரமாக எழுதுவார். எழுதும் நேரம் போக மற்ற நேரங்களில் தம்முடைய சொந்த வயல்களில் வேலை செய்வார்.

வேலை முடிந்ததும் பக்கத்திலிருந்த ரயில் நிலையத்திற்குப்போய் அங்கே காலாற கொஞ்ச நேரம் நடப்பார்.

இதுதான் அவருடைய தினசரி வழக்கம். இதுமாதிரித்தான் அன்றைக்கும் நடந்து வந்து கொண்டிருந்தார்.

அந்தச் சமயத்தில் அங்கே ஒரு அம்மா நின்று கொண்டிருந்தார். அந்த அம்மா இவரைக் கைதட்டிக் கூப்பிட்டார். இவரும் போனார்.

''ஐயா, நானும் என் வீட்டுக்காரரும் இங்கே வந்தோம். அதோ... அந்த ரயிலில் ஏறி ஊருக்குப் போக வேண்டும். என்னுடைய வீட்டுக்காரர் அந்த உணவு விடுதிக்குப் போயிருக்கிறார். இன்னும் வரவில்லை.

அதற்குள் ரயில் புறப்பட்டுவிடும் போல இருக்கிறது. நீங்கள் ஓடிப்போய் அவரை அழைத்துக் கொண்டு வந்து விடுவீர்களா?'' என்றார்.

இவர் பார்த்தார். சரி என்றார்.

அந்தம்மா தன் கணவருடைய அடையாளங்களையும் சொன்னார். இவர் அதைக் கவனமாக கேட்டுக் கொண்டார்.

நீங்க போய் அழைத்துக் கொண்டு வாங்க. வந்த உடனே உங்களுக்கு உண்டான கூலியையும் கையோடு கொடுத்து விடுவேன்''என்றார் அந்த அம்மா.

இவர் போய் அந்த அம்மா சொன்ன அடையாளங்களை வைத்து அவருடைய கணவரை அழைத்து கொண்டு வந்து அவரிடம் ஒப்படைத்தார்.

உடனே இந்தம்மா ஏற்கனவே சொன்னபடி அவருக்கான கூலிப் பணத்தையும் கொடுத்தார். அவரும் எதுவித மறுப்பும் சொல்லாமல் வாங்கிக் கொண்டார்.

வாங்கிக் கொண்டு திரும்பும் போது எதிரில் ஏற்கனவே தெரிந்த நண்பர் ஒருத்தர் வந்து விட்டார். அவர்களிருவரும் பேசிக் கொண்டதை இந்த அம்மா காதில் வாங்கிக் கொண்டார்.

அப்பொழுது தான் அவர்களுக்கு இந்த உண்மை புரிந்தது. அதாவது தன்னிடம் கூலிவாங்கிக் கொண்டவர் தான் பேரறிஞர் லியோ டால்ஸ்டாய் தெரிந்தது.

ரஷ்ய நாட்டின் மிகப்பெரிய ஞானி லியோ டால்ஸ்டாய். சோவியத் நாட்டின் ஈடிணையற்ற இலக்கிய மேதை. இது தெரிந்தவுடன் இந்த அம்மா அவரிடம் ஓடினார்.

"ஐயா, உங்களுக்காக நான் கூலி கொடுத்தேன். நான் பெரிய தவறு பண்ணிவிட்டேன்''என்று சொல்லி கவலைப்பட்டார்.

பரவாயில்லை. ஆனால் நீங்கள் எனக்குக் கொடுத்த கூலிப் பணத்தை நான் திரும்பத் தரமாட்டேன். ஏன் தெரியுமா? அது நான் உழைத்துப் பெற்றபணம்.

யாருக்குமே மகிழ்ச்சியைத் தரும் பணம் எதுவென்றால் அது அவர்களுடைய உழைப்புக்குக் கிடைத்த பணம் தான்.

நம்மாட்களில் சிலருக்கு உழைக்காமல் தீயவழியில் கிடைக்கும் பணம் கூட மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

ஒரு பெரிய தொழிற்சாலையின் முதலாளி உள்ளே யாரும் சிகரெட் பிடிக்கக் கூடாது என்று கடுமையான சட்டம் போட்டிருந்தார்.

ஒருநாள் அந்த முதலாளி தன்னுடைய தொழிற்சாலையை சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்து கொண்டிருந்தார்.

அப்பொழுது ஒரு இளைஞன் உள்ளே சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான். அதைப் பார்த்தவுடன் முதலாளிக்குக் கோபம் வந்துவிட்டது.

உடனே அவர் தனது உதவியாளரைக் கூப்பிட்டு"அதோ பார். அவன் சிகரெட் பிடித்துக் கொண்டிருக்கிறான். அவனுடைய கணக்கை முடித்து வெளியில் அனுப்பிவிடு'' என்று உத்தரவிட்டார்.

அதன்படியே, உடனே அவனை அழைத்துக் கொண்டுபோய் கணக்குப் பார்த்து சம்பளப்பாக்கி, மற்ற உதவித் தொகை எல்லாவற்றையும் மொத்தமாக கையில் கொடுத்து போயிட்டு வா''என்று சொல்லிவிட்டார்.

அவன் பணத்தோடு வெளியில் வந்தான். வெளியில் நின்று கொண்டிருந்த ஒருவரிடம் சொன்னார்:

''என்னப்பா இது? என்னுடைய நண்பன் ஒருத்தனைப் பார்க்க இந்த மில்லுக்குள் போனேன். பெயர் என்னவென்று கேட்டுவிட்டு 50 ஆயிரம் ரூபா பணத்தையும் கொடுத்து போயிட்டு வா என்று சொல்லி வெளியில் அனுப்பி வைத்து விட்டார்கள்''என்றார் ஆச்சரியமாக.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# பாடசாலை மாணவர்களுக்கான சைவ சமய கலைப்போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப் புலவர் சங்கத்தின் பொன் விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களுக்கிடையே சைவ சமயக் கலைப் போட்டிகள் நடத்தப்பட்டு விருது வழங்கப்படவுள்ளது.

பேச்சு,சைவ சமய வினாடி வினா,பஞ்சபுராணம் ஓதுதல்,கதாப்பிரசங்கம் ஆகிய போட்டிகளில் ஒவ்வொரு போட்டியிலும் தனியொருவர் பங்கு பற்ற வேண்டும். அபிநயம் இருவர் பங்குபற்றலாம். அத்துடன் சைவ சித்தாந்த அறிவுப் போட்டிக்கு ஐவரும்,இசை நாடகத்திற்கு நால்வரும் ,வில்லுப் பாட்டுக்கு ஆறு பேரும் பங்குபற்றலாம். மேலும் போட்டிகள் வகுப்பு பிரிவின்றி திறந்த போட்டியாக நடைபெறும்.

மேலும் இப்போட்டிகளுக்குரிய விடயப் பிரதிகள் விண்ணப்பிப்பவர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அவற்றை மனனம் செய்து அவற்றைப் ஒப்புவிக்க வேண்டும்.

இதில் வில்லுப்பாட்டு 63 நாயன்மார்களில் ஒருவரைப்பற்றியது. 30 நிமிடம் விடயத்தைத் தாங்கள் எழுதி ஒரு பிரதியை சமர்ப்பிக்க வேண்டும்.

கதாப்பிரசங்கம் 63 நாயன்மார்களில் ஒருவரைப்பற்றியது. 15 நிமிடம் விடயத்தை தாங்கள் எழுதி ஒரு பிரதியை சமர்ப்பிக்க வேண்டும் .

ஒரு பாடசாலையில் இருந்து ஒவ்வொரு தனிப்போட்டிக்கும் இருவரும், குழுப்போட்டிக்கு ஒவ்வொரு குழுவும் பங்குபற்றலாம்.

ஒருவர் ஒரு போட்டியில் மட்டும் பங்கு பற்ற முடியும். இப்போட்டியில் முதல் 3 இடங்களைப் பெறுவோருக்கு பெறுமதி வாய்ந்த விருதுகள் வழங்கப்படவுள்ளதுடன் பொன் மலரிலும் பதிவு செய்யப்படும்.

போட்டிகள் ஓகஸ்ட் மாத நடுப் பகுதியில் நடைபெறவுள்ளது.

மேலும் விருது வழங்கும் விழா அகில இலங்கை சைவப் புலவர் சங்கப் பொன் விழாவில் வழங்கப்படும் எனவும் முதலிடம் பெறும் நிகழ்ச்சிகள் விழாவில் நிகழ்த்தப்பட வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

விண்ணப்பிக்க விரும்புவோர் விண்ணப்பங்களை எதிர்வரும் 6ஆம் திகதிக்கு முன்னர் மாதிரி படிவத்தில் தயாரித்து சைவப்புலவர் செ.கந்த சத்தியதாசன், செயலாளர், 153,காங்கேசன் துறைவீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு சங்கச் செயலாளர் அறிவித்துள்ளார். (6-4)

## முதலுதவிப் பயிற்சி

(நல்லூர்)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க காரைநகர்ப் பிரிவின் தொண்டர்களுக்கும் காரைநகர் முன்பள்ளி ஆசிரியர்களுக்குமான முதலுதவிப் பயிற்சி நாளை வெள்ளிக்கிழமை தொடக்கம் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை காரைநகர் கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் இலங்கை செஞ்சிலுவைச் சங்க காரைநகர் பிரிவின் தலைவர் சோ.விக்னேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (2-134)


## இராசி பலன்

*29.07.2010*
*(ஆடி 13,வியாழக்கிழமை)*
*திருதியை பிற்பகல் 12.59 மணிவரை*
*சதயம் பிற்பகல் 5.27 மணிவரை*
*இராகுகாலம் 1.33-3.03 மணிவரை*
*சுபநேரம் 7.33-9.03மணிவரை*
*வண்.கிழக்கு எச்சாட்டி மாரி அம்மை கொடி யேற்றம்*

| | |
|---|---|
| மேடம் | கலந்துரையாடல்,தனதானிய சேர்க்கை, எடுத்த காரியம் கைகூடும். கீர்த்தி |
| இடபம் | இஸ்டசித்தி, பெரியோரால் மதிக்கப்படல், பிரயாண சுகம், ஆரோக்கியம் |
| மிதுனம் | சரீரப்பிரயாசை, ஆரோக்கியக் குறைவு, பிரயாண நன்மை, தேவையற்றபயம். |
| கடகம் | மனக்கவலை, பொருள் விரயம், உஷ்ண வியாதி, போசன சுகம். |
| சிங்கம் | தனவருவாய், நல்ல செய்தி, முயற்சி கைகூடும், நண்பர்கள் சந்திப்பு. |
| கன்னி | வேலையில் ஆர்வம், முயற்சி கைகூடும், விருந்துபசாரம், உறவினர் உதவி. |
| துலாம் | அமைதிக் குறைவு,பூர்வ புண்ணிய கருமம், காரிய தாமதம், தனவிரயம் |
| விருச்சிகம் | சுபகாரியம், நண்பர்கள் சந்திப்பு, மனச்சஞ்சலம், கல்வியில் ஆர்வம். |
| தனுசு | கூட்டு முயற்சி, பிரயாண நன்மை, தனவருவாய், சகோ தரர் உதவி. |
| மகரம் | விவாதம், எடுத்த காரியம் தாமதமாகும், போசன சுகக் குறைவு, தனவிரயம். |
| கும்பம் | உறவினர் வருகை, முயற்சி பலிதம், தன வருவாய், கீர்த்தி. |
| மீனம் | பிரயாணம், பிறருக்கு உதவி செய்தல், முயற்சி தாமதம், சுப செலவு. |

வளவன்

## பேசும் படம்




காட்சி - அக்கராயன் அ.த.க. பாடசாலை

இவர்களுக்கு உதவிடுங்கள்....

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 50 | 70 | 70 |
| பச்சைமிளகாய் | 90-100 | 120 | 100 |
| தக்காளி | 70 | 70 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 70 |
| கோவா | 70 | 80 | 70 |
| கரட் | 120 | 140 | 120 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 30 | 40 | 30 |
| வாழைக்காய் | 50 | 60 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 50 | 70 | 60 |
| பாகற்காய் | 70 | 90 | 100 |
| வெண்டிக்காய் | 40 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 60 | 70 | 50 |
| பயற்றங்காய் | 60 | 70 | 70 |
| லீக்ஸ் | 120 | 150 | -- |
| பீற்றூட் | 50 | 80 | 60 |
| கறிமிளகாய் | 100 | 120 | 90 |
| முருங்கைக்காய் | 120 | 150 | 100 |
| போஞ்சி | 80 | 50 | 100 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 15 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25 | 30 | 25 |



அதிபர்களின் வினைத்திறனை அதிகரித்து பாடசாலையின் முகாமைத்துவத்தை மேம்படுத்தும் நோக்கில் யாழ்.கல்வி வலய அதிபர்களுக்கான பாடசாலை மேம்பாட்டுத் திட்டம் தொடர்பான செயலமர்வு நேற்று நடைபெற்றது. இச்செயலமர்வில் பாடசாலை மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டத்திற்கான வடமாகாண நிபுணத்துவ ஆலோசகர் என்.அனந்தராஜா, யாழ்.வலய ஆசிரிய வளநிலைய முகாமையாளர் என்.ரட்ணசிங்கம் ஆகியோர் உரையாற்றுவதையும் செயலமர்வில் கலந்துகொண்ட அதிபர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

## சுப்பர் சவால் கிண்ணம் மகேசன் அணி வசமானது

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தினால் ஆண்டு தோறும் நடாத்தப்பட்டு வரும்" சுப்பர் சவால் கிண்ண இறுதிப் போட்டி" கடந்த 26 ஆம் திகதி மைக்கல் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடை பெற்றது.

இப்போட்டியில் கரவெட்டி மகேசன் அணியை எதிர்த்து மைக்கல் அணி விளையாடியது.

நாணயச் சுழற்சியில் வென்ற மகேசன் அணி முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கியது. 10.3 ஓவர்களில் 117 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் சுதன், சிறீகாந்தா, முறையே 46, 30 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் மைக்கல் அணி சார்பாக தர்சன், வேணுகானன் முறையே 4, 3, அச்சுதன், தினோஜன் தலா ஒரு விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மைக்கல் அணி 19.1 ஓவர்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 94 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தர்சன், கார்த்தீபன் முறையே 40, 15 ஓட்டங்களைப் பெற்றனர். மகேசன் அணி பந்துவீச்சு சார்பில் ராஜீபன், அனுரதன் தலா 2, மதன், சிறீஸ்காந்தா, கமல் தலா ஒரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இறுதியில் 24 ஓட்டங்களால் மகேசன் அணி வெற்றி பெற்று மைக்கல் அணி சுப்பர் சவால் கிண்ணத்தைக் கைப்பற்றியது. (2-24)

## ஆன்மீக சொற்பொழிவு

(மருதங்கேணி)

வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சுழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில், பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு பூசை முடிவுற்றதும் ''மகாபாரதம்'' என்ற தொடர் சொற்பொழிவை சொல்லின் சிகரம் பொன். சுகந்தன் நிகழ்த்தவுள்ளார். (2-35)

## பேச்சு ஆங்கில வகுப்பு ஆரம்பம்

(அல்வாய்)

தரம் 1, 2இல் கல்வி பயிலும் மாணவர்களுக்கான பேச்சு ஆங்கில வகுப்பு, ஆங்கில கற்றல் வள நிலையத்தின் ஊடாக நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு குடத்தனை அ.மி.த.க. பாடசாலையில், வித்தியாலய அதிபர் ப.செல்வவிநாயகர் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக மருதங்கேணி கோட்டக் கல்விப் பணிப்பாளர் க.பொன்னையா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (2-19)

## பொன்விழா மலர் வெளியிடப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை சைவப்புலவர் சங்கத்தின் பொன்விழாவை முன்னிட்ட பொன்விழா மலர் அடுத்தமாதம் வெளியிடப்படவுள்ளது.

அம்மலரில் இதுவரை சைவப்புலவர் பட்டம் பெற்றவர்களது விபரம் வெளிவரவுள்ளதால் பட்டம் பெற்றவர்கள் தமது புகைப்படம், சுயவிபரம், சாதனை உள்ளிட்ட விபரங்களை செயலாளருக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசன் அறிவித்துள்ளார். (6-4)

## மர்மப் பொருட்கள் காணப்படுவதால் மக்கள் குடியேறுவதற்கு அச்சம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை மணி யந்தோட்டம் 7 ஆம் குறுக்கு வீதி பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரின் பணிகள் பூர்த்தியடைந்துள்ளமையால் அப்பகுதியினூடாக மக்கள் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கண்ணி வெடிகள் அகற்றப்பட்டாலும் அப்பகுதியில் மர்மப் பொருட்கள் காணப்படுவதால் அங்கு வாழ் மக்கள் அச்சம் தெரிவிக் கின்றனர்.

மேலும் அங்குள்ள வெற்றுக் காணியொன்றில் வெடிக் காத நிலையில் ஷெல் மீட்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.(6-2-51)

## பாடசாலை மட்ட விஞ்ஞான வினாடி வினா போட்டி

(அல்வாய்)

பாடசாலை மட்ட விஞ்ஞான வினாடி வினா போட்டிகளை இருமொழி மூலமாக (தமிழ், ஆங்கிலம்) தரம் 6-11 வரை சகல மாணவர்களுக்கும் நடத்தி பெறுபேறுகளை தனித்தனியாக பாடப்பதிவுப் புத்தகத்தில் பதியுமாறு சகல பாடசாலைகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ் வினாத்தாள் தொகுதியில் 70 வீத வினாக்கள் போட்டி நடைபெறும் திகதிவரை கற்பித்து முடிக்கப்பட்ட பாட அலகிலிருந்தும் அதற்கு முன்னைய தரப் பாட அலகிலிருந்தும் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

ஏனைய 30 வீத வினாக்கள் பொதுவான வினாவாக அமையலாம்.

தமிழ் மொழி மூல மாணவர் தொகையில் 50 மாணவர்களுக்கு ஒருவர் என்ற வீதத்திலும் ஆங்கில மொழி மூல மாணவர் தொகையில் 25 மாணவர்களுக்கு ஒருவர் என்ற வீதத்திலும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு வலய மட்டப் போட்டிக்கான பட்டியலை எதிர்வரும் 6 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படும் எனவும் வலய மட்டப் போட்டிகள் செப்ரெம்பர் மாதம் நடைபெறும் எனவும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4-19)




## கலைநிலா அரங்கு

(கொழும்புத்துறை)

திருமறைக் கலாமன்ற கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் கலைநிலா அரங்கு நிகழ்வு நாளை மறுதினம் சனிக்கிழமை யாழ்.பிரதான வீதியில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக யாழ்.பல்கலைக்கழக மெய்யியல் முதுநிலை விரிவுரையாளர் எஸ்.அன்ரன் டயஸும் அவரது பாரியாரும் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியக உத்தியோகத்தர் ஜெ.தர்மராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

இந்நிழ்ச்சி நிறைவில் கலைநிகழ்ச்சிகளும் நடைபெறும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (2-51)

## முன்பள்ளி விளையாட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

ஆனந்தபுரம் புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள கலைவாணி முன்பள்ளியின் விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் நிலையத்தலைவர் கந்தசாமி பாலதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் க.விமலநாதன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (4)

## மாகாண மட்ட போட்டியில் முதலாமிடம் பெற்றுள்ளார்

(யாழ்ப்பாணம்)

யாழ்/ நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை தரம் 8 ஐச் சேர்ந்த மாணவி மினுஜா கந்தசாமி மாகாண மட்ட சமூக விஞ்ஞான மட்டப் போட்டியில் வெற்றியடைந்து தேசிய மட்டப்போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை இவ் மாணவியின் இவ் வெற்றியானது பாடசாலை சமூகத்திற்கு பெருமையைத் தேடித் தந்துள்ளதென வித்தியாலய அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் தெரிவித்துள்ளார். (6)

## பயிற்சிநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண சுகாதார அமைச்சினால் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மற்றும் மருந்துக்கலவையாளர் பயிற்சி நெறிக்கு தெரிவுசெய்யப்பட்டு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிராந்திய பயிற்சி நிலையத்தில் தங்களது பெயர் விபரங்களை பதிவு செய்தவர்களிற்கான பயிற்சிநெறி எதிர்வரும் 2 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள பிராந்திய பயிற்சி நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

பதிவு செய்த அனைத்து மாணவர்களும் தவறாது சமுகமளிக்குமாறு யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.சிவராணி அறிவித்துள்ளார். (4)

## நூற்றாண்டு விழாவையொட்டிய கிரிக்கெட் போட்டி

(கைதடி)


யாழ். கைதடி முத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, கைதடி, நாவற்குழி பிரதேசங்களுக்கு இடையிலான கிரிக்கெட் சுற்றுப் போட்டி ஒன்றினை நடத்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய இவ் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் பங்குபற்ற விரும்பும் கழகங்கள் தமது பதிவினை முன்கூட்டியே பதிவுசெய்து கொள்ளுமாறு அதிபரும், விழா ஏற்பாட்டாளர்களும் கேட்டுக்கொள்கின்றனர். (2)

## சித்த மருத்துவ நூல் வெளியீட்டு விழா

(கைதடி)

டாக்டர் செல்லத்துரை பரமசிவப்பிள்ளை எழுதிய" பாரம்பரிய சித்த வைத்திய அனுகுமுறையும் அனுபவங்களும்" என்ற ஆய்வு நூல் வெளியீட்டு விழாஎதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக சித்த மருத்துவத் துறை பிரதான மண்டபத்தில் தலைவர் டாக்டர் சிவஞானமணி பஞ்சராசா தலைமையில் இடம்பெறவுள்ளது. (2)



ஜனநாயகப் பண்புகளையும் அரசியல் செயற்பாடுகளையும் மாணவர்களிடம் வளர்க்கும் பொருட்டு அரசின் திட்டத்திற்கமைய பாடசாலைகளில் மாணவர் பாராளுமன்றம் அமைக்கும் வகையில் வடக்கில் முதன்முதலாக யாழ்.மத்திய கல்லூரியில் மாணவர் பாராளுமன்ற தேர்தல் நடைபெற்றது.இந்நிகழ்வில் கல்லூரி அதிபர் இ.ஓங்காரமூர்த்தி பிரதம தேர்தல் ஆணையாளராக கடமையாற்றும் ம.வரதராஜனிடம் தேர்தல் வாக்குப் பெட்டியை வழங்கி ஆரம்பித்து வைப்பதையும் ஆசிரியர்கள் தேர்தல் அதிகாரிகளாக கடமையாற்றுவதையும் மாணவர்கள் வாக்களிப்பில் கலந்து கொள்வதையும் படங்களில் காணலாம்.

# இலங்கையின் அபிவிருத்திக்கு உதவிகள் வழங்கப்படும்

## ஜப்பான் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்திப் பணிகளுக்கான உதவிகள் தொடர்ந்து வழங்கப்படும் என ஜப்பான் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

ஜப்பானின் இரு அமைச்சர்கள் கடந்த திங்கட்கிழமை இலங்கை வந்துள்ளனர். இவர்கள் அபிவிருத்தி நடவடிக்கைகள் குறித்து அரச தரப்புடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நேற்று முன்தினம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோரை சந்தித்து பேச்சுக்களை நடத்தியிருந்தனர்.

இதன்போது இலங்கையில் உட்கட்டுமான பணிகளுக்கு ஜப்பான் தொடர்ந்து உதவும் என ஜப்பானின் உட்கட்டுமான, காணி, போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் செஜிமெகேரா தெரிவித்துள்ளார். நாட்டில் அமைதியும், உறுதித்தன்மையும் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரவித்துள்ளார். (6)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
## உயர் பட்டப்படிப்புகள் பீடம்

### ஈராண்டுப் பகுதி நேரப் பட்டப்பின் கல்வித்தகைமைக் கற்கைநெறி – 2011/2013

(பிரிவு 5)

### வவுனியா வளாகம்.

### புதிய அனுமதி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் நடாத்தப்படும் மேற்படி சுயகொடுப்பனவுக் கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் பட்டதாரி ***ஆசிரியர்களிடமிருந்தும் கல்வி நிர்வாகிகளிடமிருந்தும்*** கோரப்படுகின்றன. விண்ணப்பதாரிகள் 2011.01.01 அன்று 50 வயதுக்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

இக்கற்கைநெறி தொடர்பான விண்ணப்பப் படிவங்களை வியாபாரக் கற்கைகள் பீடம், வவுனியா வளாகத்தில் ரூபா.300/= இற்கான பற்றுச்சீட்டினை சமர்ப்பித்துப் பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளர், யாழ் பல்கலைக்கழகம் என்ற பெயரில் பெறப்பட்ட ரூபா 300/= இற்கான காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் ரூபா 5/= பெறுமதியான முத்திரை ஒட்டப்பட்ட சுய முகவரியிடப் பட்ட 23 X 10 செ.மீ அளவிலான தபால் உறையினையும் பீடாதிபதி, வியாபாரக் கற்கைகள் பீடம், வவுனியா வளாகம், வவுனியா எனும் முகவரிக்கு அனுப்புதல் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

எழுத்துத் தேர்வு ( பொது விவேகம், கல்வியியல் பொதுத் தகைமை) மற்றும் நேர்முகத் தேர்வு இரண்டினதும் பெறுபேறுகளுக்கமைய தெரிவுகள் இடம்பெறும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் யாவும் 2010.09.03 ஆம் திகதிக்கு முன்னர் வவுனியா வளாக வியாபாரக் கற்கைகள் பீடத்தின் பீடாதிபதி அலுவலகத்தில் சமர்ப்பிக்கப் படல் வேண்டும். இக் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

போதியளவு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெறாவிடின் மேற்படி கற்கை நெறியானது இரத்துச் செய்யப்படக் கூடும்.

*பதிவாளர்*
*26/07/2010*

(சி/763)


# மன்னாரில் டெங்குநோயால் மூவர் உயிரிழந்துள்ளனர்

மன்னாரில் டெங்கு நோயினால் பாதிக்கப்பட்ட 7 வயது சிறுவன் உட்பட மூன்று பேர் இது வரை மரணமாகியுள்ளதாக மன்னார் சுகாதார சேவைகள் பணிமனை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இம்மாதம் முதலாம் திகதி முதல் இது வரை டெங்கு காய்ச்சல் காரணமாக பெண்கள், சிறுவர்கள் உட்பட 29 பேர் மன்னார் பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மடுக்கரைப் பகுதியைச் சேர்ந்த கிருஷ்ண செல்வி (வயது 31) பெரியகமம் எழுத்தூர் பகுதியைச் சேர்ந்த நாகேஸ்வரி (வயது 41, கிரி பகுதியைச் சேர்ந்த சஜித் குமார் (வயது 7) ஆகிய மூவருமே மரணமடைந்துள்ளனர்.

இந்நிலையில் மன்னார் பகுதிகளில் டெங்கு நுளம்பின் பெருக்கம் அதிகரித்து காணப் படுகின்றமையினால் மக்களை விழிப்புடன் இருக்குமாறும் வீடுகள் மற்றும் சுற்றுப் புறங்களை சுத்தமாக வைத்திருக்கும்படியும் மன்னார் சுகாதார சேவைகள் பணிப்பாளர் வேண்டு கோள் விடுத்துள்ளார். (6)

# இலங்கையின் பிரசித்தி பெற்ற இடங்கள் உலக அதிசயங்களில் இடம் பிடிக்குமா?

(கொழும்பு)

உலக அதிசயங்களில் ஒன்றாக அங்கீகரிக்கும்படி இலங்கையிலுள்ள மூன்று இடங்களின் பெயர்களை பிரேரிப்பதற்காக சுற்றாடல் துறை பிரதி அமைச்சர் பைஸர் முஸ்தபா உட்பட அதிகாரிகள் குழுவொன்று பிரஸல்ஸ் நகரில் நடைபெறுகின்ற உலக ஏழு அதிசயங்களை தெரிவு செய்யும் மாநாட்டுக்கு சென்றுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்திய மாகாணத்திலுள்ள நக்கில்ஸ் மலைத் தொடர் ஹோட்டன் மலைத்தொடர் சிவனொளிபாதமலை என்பனவே அம் மூன்று இடங்களுமாகும்.

உலகில் ஏழு அதிசயங்களாக இதுவரை இடம் பிடித்துள்ள உலகப் பிரசித்தி பெற்ற இடங்களை மறுபரிசீரமைப்பபதற்கு உலக அதிசயங்களை தெரிவு செய்யும் குழு தீர்மானித்துள்ளது. (6)

# வீடுகளில் சூரிய சக்தி மூலம் மின் உற்பத்தி செய்யும் திட்டம்

## மின்சக்தி எரிசக்தி அமைச்சர் ஆரம்பித்து வைப்பு

(கொழும்பு)

வீடுகளில் சூரிய சக்தியின் மின் உற்பத்தி செய்யும் நெட்மீற்றர் மின்சாரத் திட்டத்தை மின்சக்தி எரிசக்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்று முன்தினம் பத்திரமுல்ல பகுதியில் ஆரம்பித்து வைத்தார்.

தமது வீட்டுக்குத் தேவையான மின்சாரத்தை இதனூடாக உற்பத்தி செய்ய முடிவதோடு மேலதிக மின்சாரத்தை மின்சார சபைக்கு விற்கவும் முடியும் என மின்சக்தி எரிசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

வீட்டுத்தேவைக்கு போதுமான அளவு மின்சாரம் உற்பத்தியாகாத போது அதனை மின்சார சபையினூடாக பெறவும் நெட் மீற்றர் பாவனையாளர்களுக்கு வசதி அளிக்கப்படும். இந்தத் திட்டத்தின் கீழ் 4.5 கிலோ வொற் நெட் மீட்டரினூடாக தினமும் 12 முதல் 23 அலகுகள் மின் உற்பத்தி செய்ய முடியும்.

வியாயாரிகள் கைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் மின் உற்பத்தி செய்ய முடியும்.

வியாபாரிகள் கைத்தொழிற்சாலை உரிமையாளர்கள் மற்றும் மின் பாவனையாளர்களும் இந்தத் திட்டத்தில் இணைய முடியும் என அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை முதலாவது நெட் மீற்றர் பத்திரமுல்லை ஜயந்திரபுரவில் உள்ள புரூம் கூட்டு வியாபாரம் உரிமையாளர் மஹிபாலவின் வீட்டில் பொருத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (6)

# கணித பாட ஆசிரியர்களுக்கான கேத்திர கணித பயிற்சிப் பட்டறை

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரை கற்பிக்கும் கணித பாட ஆசிரியர்களுக்கான கேத்திர கணிதம் தொடர்பான பயிற்சிப்பட்டறை நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஞாயிற் றுக்கிழமையும் நடை பெறவுள்ளது.

இதில் பருத்தித்துறை கோட்ட ஆசிரியர்களுக்கு நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கரவெட்டிக்கோட்ட ஆசிரியர்களுக்கு முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் 3.30 மணி வரை நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கோட்ட ரீதியாக இப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படுவதால் கணித பாட ஆசிரியர்கள் தவறாது சமுகமளிக்க வேண்டும் எனவும் கணித வினாடி வினா போட்டிக்கு பங்கு பற்றும் மாணவர்களின் விபரங்களையும் தவறாது கொண்டு வருமாறும் வடமராட்சி வலய கணிதபாட உதவிக்கல்விப் பணிப்பாளர் ந.ம. ஈஸ்வரதேவன் அறிவித்துள்ளார். (4-19)


# காங்கிரஸுடன் பேரம் பேசவே என்னை கைது செய்துள்ளனர்

## நீதி மன்றில் சீறிய சீமான்

" இருப்பாய் தமிழா நெருப்பாய்..." என்ற சொற்களுக்கு ஏற்ப,நீதிமன்ற வாசலில் நெருப்பாகவே ஜுவாலை வீசினர்.'நாம் தமிழர்' இயக்கத்தினர் 'இந்திய இறையாண்மைக்கு எதிராகப் பேசியதாகக் கைது செய்யப்பட்ட இயக்குநர் சீமானை, கடந்த 23ஆம் திகதி சென்னை ஜோர்ஜ் நகர நீதிமன்றில் ஆஜர்ப்படுத்த வந்தபோது, பொலிசுக்கும் அவர்களுக்கும் இடையே பயங்கரத் தள்ளுமுள்ளு ஏற்பட்டது "செந்தமிழன் சீமானை விடுதலை செய்!" என்று கொநதளித்தபடி அவர்கள் ஓடி வர...கூட்டத்தைக் கட்டுப்படுத்த திண்ணாடிய பொலிஸார், ஒருவழியாக மேல் நீதிமன்ற நீதவான் சாந்தினி முன்பு சீமானை நிறுத்தினர். நீதிபதியும், எதிர்வரும் 6ஆம் திகதி வரை சீமான் காவலை நீட்டிக்க' உத்தரவிட்டார்!

இரண்டே நிமிடங்களில் ஆஜர் முடிந்து... மீண்டும் வானுக்கு சர்வஜாக்கிரதையாக அழைத்துச் சென்றனர். நீதிமன்றப் படிகளில் இறங்கும்போது கிடைத்த சில நொடிகளில் சீமானிடம் நாம் பேசியபோது, "காங்கிரஸுடன் பேரம் நடத்தவே,என்னை இந்த அரசு கைது செய்துள்ளது..." என்று மட்டும் சிறாலாகச் சொன்னார் சீமான்.

அங்கு திரண்டு நின்ற இயக்கத்தினர் சிலர் நம்மிடம், "இரு இனத்துக்கு இடையே மோதல் உருவரக்கும் வகையில் பேசியதற்காகத்தான் இந்தக் கைது என்று கூறுகின்றனர். எங்களைப் பொறுத்தவரை சிங்களவன், ஓர் இனமே அல்ல. மற்ற இனத்தின் மீது பரிவு கொள்வதுதான் இன்னோர் இனத்துக்கு அழகு. ஆனால், சிங்களன் அப்படியா? அங்கே தமிழனுக்கு அநீதி நடப்பதைக் கண்டு எப்படி சும்மா இருக்கமுடியும்? நியாயமான உணர்ச்சி வேகத்தில்தான் எங்கள் தலைவர் பேசினார். அதற்காக, ஏதோ தேசவிரோத குற்றவாளிபோல கைது செய்து



சிறையில் போட்டு, அவரின் கைதை வைத்து காங்கிரஸுடன் பேரம் நடத்துகிறது இந்த அரசு!

கடந்த நாடாளுமன்றத் தேர்த லில் சேலத்தில் தங்கபாலுவும், ஈரோட்டில் ஈ.வி.கே.எஸ். இளங் கோவனும் தோற்க முக்கிய காரணம்,எங்கள் தலைவர் சீமான்தான். ஈழ விவகாரத்தில் காங்கிரஸின் இரட்டைவேடத்தைத் துணிச்சலுடன் மேடைகளில் தோலுரித்தார். வரும் சட்டமன்றத் தேர்தலில், காங்கிரஸ் போட்டி யிடும் எல்லாத் தொகுதிகளிலும் 'நாம் தமிழர்' சார்பில் வேட் பாளர்களை நிறுத்தி, காங்கிரஸைத் தமிழகத்தில் காலியாக்கத் திட்டம் வைத்திருந்தோம். இதைத் தெரிந்து கொண்டுதான் கலைஞர், ஓராண்டு வெளிவராதபடி எங்கள் தலைவரைக் கைது செய்துள்ளார்.

மேலும், 'தி.மு.க.வுடன் காங்கிரஸ் கூட்டணி வைக்க வில்லை என்றால் சீமானைவிட்டு விடுவேன். அது உங்களுக்கு அதிக பாதகமாக அமையும்' என்று தங் கபாலு மூலம் காங்கிரஸ் மேலி டத்துக்குக் கூறியுள்ளார்.

நீதி எங்கள் பக்கம்... அடக்கு முறைக்கு அஞ்சமாட்டோம். விரைவில் தலைவர் வெளிவந்து, மீண்டும் மேடை ஏறியே தீருவார், பாருங்கள்!..." என்றனர், கொந்தளிப்பாக.

சீமானின் வழக்கறிஞர் தடா சந்திரசேகரனிடம் பேசினோம். "சிறையில் சீமானுக்கு உடற் பயிற்சி செய்யக்கூட அனுமதி இல்லை. தனி அறையில் அடைத் துள்ளனர். தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் அவரை அடைத்தது தவறு.இதை வலியுறுத்தி, இரண்டொரு நாளில் அட்வைசரி கமிட்டியில் முறையிடுவோம்.விரைவில் நல்ல செய்தி கிடைக்கும்!" என்றார்.

## மின்சாரத்தை அதிகளவு பயன்படுத்தும் வர்த்தக நிறுவனங்கள் குறித்து ஆய்வு

(கொழும்பு)

மின்சாரப் பாவனை அதிகமாக உள்ள நேரத்தில் மின்சாரத்தை அதிகமாகப் பாவிக் கும் வர்த்தக நிறுவனங்கள் தொடர்பாக இலங்கை மின்சார சபை ஆய்வொன்றை ஆரம்பித்துள்ளது.

இந்த நடவடிக்கைக்காக விசேட குழு வொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக மின்சார சபையின் தலைவர் வித்யா அமரபால தெரி வித்துள்ளார்.

அதிக மின் பாவனையில்லாத நேரத்தில் தொழிற்சாலைகளில் அதிகளவு மின்சாரம் பாவிக்கப்படுவது குறித்தும் இந்த ஆய்வின் ஊடாகக் கண்டறியப்படவுள்ளது.

இரவு 8.30முதல் 9.30 வரையிலான காலப் பகுதியில் மின்சாரம் அதிகளவில் பயன்படுத்தப்படுவதால் மின்சார உற்பத் தியை அதிகரிக்க வேண்டியுள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

மின்சார சபைக்கு ஏற்பட்டுள்ள நஷ்டத் தைக் குறைப்பது தொடர்பாக ஆராய் வதே இந்த ஆய்வின் நோக்கமென மின்சார சபைத் தலைவர் மேலும் குறிப்பிட்டார். (6)

## குழாய் நீர்க் கிணற்றை துப்புரவு செய்து தருமாறு கோரிக்கை

(நல்லூர்)

யாழ் மாநகர சபைக்குட்பட்ட நாயன் மார் கட்டுச் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணற்று நீரானது துர்நாற்றம் வீசுவதால், அப்பகுதி மக்களுக்கு குடிநீர் பெறுவதற்கு வசதி இன்றி அலைந்து திரிவதைக் காணக் கூடியதாகவுள்ளது.

இப்பாதையூடாகப் பயணிக்கும் பொது மக் களும் தமது தாகத்தைத் தீர்ப்பதற்கு இவ் குழாய் கிணற்று நீரையே அருந்துகின்றனர்.

இந்நீரானது துர்நாற்றம் வீசுவதை யடுத்து, நாயன்மார் கட்டுப் பாரதி மன்றத் தலைவர் இ.மயில்வாகனம் யாழ்.மாநகர முதல்வர் திருமதி. யோகேஸ்வரி பற்குண ராசாவிடம் மகஜர் ஒன்றைக் கையளித்துள் ளார்.

இக்குழாய் நீர் கிணற்றை துப்புரவு செய்து, இறைத்து, மக்கள் தூயகுடி நீரைப் பெறு வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதில் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (2-134)



இலங்கை மின்சார சபையின் யாழ். நகர மின் சேவையாளர் பணிமனையின் மின் அத்தியட்சகர் தலைமையிலான குழுவினரால் சட்டவிரோத மின் பாவனையைத் தடுக்கும் முகமாக கொழும்புத்துறை வளம்புரம் பகுதியில் நேற்று முன்தினம் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மின்சாரம் பெற்றுக் கொள்வதற்கு பயன்படுத்தப்பட்ட வயர்களையும் சோதனை மேற்கொண்ட அதிகாரிகளையும் படத்தில் காணலாம். (படம்:- குருநகர் செய்தியாளர்)

## குழப்பம் விளைவித்த குற்றச்சாட்டில் 8 இலங்கையர்கள் மீது விசாரணை

(கொழும்பு)

அவுஸ்திரேலியாவின் கிறிஸ்மஸ் தீவில் குழப்பத்தை விளைவித்தார்கள் என்ற குற்றச் சாட்டின் பெயரில் 8 இலங்கையர்கள் மீது நீதிமன்ற விசாரணைகள் இடம்பெறவுள் ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் இந்த விசாரணைகள் பேர்ஸ் நீதவான் நீதிமன்றில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிறிஸ்மஸ் தீவு முகாமில் ஆயுதங்கள் சகிதம் இலங்கை அகதிகள் மேற்கொண்ட கலவரத் தினால் 43 பேர் காயமடைந்தனர். இந்த சம்பவத்தில் இலங்கையர்கள் உட்பட ஏனைய நாட்டவர்கள் 200 பேர்வரை ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்தச் சம்பவம் தொடர்பாக குற்றம் சுமத்தப்பட்ட மற்றுமொரு இலங்கை யருக்கு ஏற்கனவே சிறைத்தண்டனை விதிக் கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்படுகிறது. (6-4)

# கடற்கொள்ளையர்களால் கடத்தப்பட்ட இலங்கை மாலுமிகளை விடுவிக்க நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கை மாலுமிகள் 13 பேருடன் கடத்தப்பட்டு சோமாலியக் கடற்கொள்ளையர்களின் கட்டுப்பாட்டில் உள்ள சவுதி அரேபியக் கப்பலை மீட்பதற்கு குறித்த கப்பல் நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருவதாகக் கொன்சியூலர் பிரிவு தெரிவித்துள்ளது.

சோமாலியக் கடற்கொள்ளையர்கள் கோரியுள்ள கப்பத் தொகையை வழங்குவதற்கு அந்தக் கப்பல் நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளதாக ஜெத்தாவில் உள்ள இலங்கைக் கொன்சியுலர் நாயகம் சபருல்லா கான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக துறைமுகம் மற்றும் விமான சேவை அமைச்சின் வர்த்தகக் கப்பல் பணிப்பாளர் நாயகம் சாந்த வீரக்கோன் தெரிவிக்கையில்,

சோமாலியக் கடற்கொள்ளையர்களினால் தடுத்துவைக்கப் பட்டுள்ள 13 பேரையும் மீட்பதற்குத் தற்போது இராஜதந்திர மட்டத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். (6)

# நல்லூர் பின் வீதியில் முறைப்பாட்டுப் பெட்டி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணத்தில் நடைபெறுகின்ற சட்டவிரோத செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில், யாழ்.பொலிஸாரினால் முறைப்பாட்டுப் பெட்டி ஒன்று நல்லூர் பின் வீதியில் வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மேலும் தெரியவருவ தாவது,

யாழ். பொலிஸாரினால் சட்டவிரோத நடவடிக்கையைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் நல்லூர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு, இத்திருவிழாக் காலங்களில் நடைபெறுகின்றன சட்டவிரோத செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் நோக்கில், மேற்படி முறைப்பாட்டுப் பெட்டி அமைக்கப்பட்டுள்ள தாகவும் இத் தகவல் தொடர்பாக அறிந்த பொது மக்கள் விரைந்து செயற்படுமாறு பொலிஸார் அறிவுறுத்துகின்றனர்.

இதேவேளை முறைப்பாடு தெரிவித்த 24 மணித்தியாலயத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-51)

# விண்ணப்பங்கோரல்

(யாழ்ப்பாணம்)

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறி தரம்-2 2010/2011 கற்கை நெறிக்கான புதிய பிரிவானது யாழ். நிலையத்தில் எதிர்வரும் புரட்டாதி மாதத்தில் ஆரம்பிக்கப்படவுள்ளது. இக்கற்கை நெறியில் இணைந்துகொள்ள விரும்புபவர்கள் இதுவரை விண்ணப்பிக்காதிருந்தால் உடனடியாக தமது விண்ணப்பப் படிவங்களை இலங்கை நூலக சங்கத்துக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றது.

நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறி-தரம்1 கற்கை நெறியை பூர்த்தி செய்தவர்கள் மாத்திரமே இப் பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்க தகுதியுடையவர்களாவர். இதுதொடர்பான மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள விரும்புபவர்கள் யாழ்.நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி. கல்பனா சந்திரசேகரிடம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகத்தில் அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளுமாறு இலங்கை நூலகச் சங்கம் யாழ். நிலைய ஒருங்கிணைப்பாளர் அறிவித்துள்ளார். (4)

# இ.போ.சபையின் நாளாந்த வருமானம் அதிகரித்து வருகிறது - ரோஹன திசாநாயக்க

இலங்கை போக்குவரத்து சபை ஈட்டிவரும் நாளாந்த வருமானம் அதிகரித்து வருவதாக பிரதி போக்குவரத்து அமைச்சர் ரோஹன திசாநாயக்க தெரிவித்தார்.

இ.போ.ச.வை முன்னேற்ற எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகளும் பயணிகளுக்குத் தேவையான வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதையடுத்தே இ.போ.ச.கூடுதல் வருமானம் ஈட்டி வருவதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை கடந்த மே மாதம் இ.போ.ச.வின் ஒருநாள் வருமானம் 3 கோடியே 87 இலட்சத்து 81 ஆயிரத்து 102 ரூபா. ஜூன் மாதமாகும் போது அந்தத் தொகை 4 கோடியே 9 இலட்சத்து 68 ஆயிரத்து 896 ரூபாவாக அதிகரித்தது.

தற்பொழுது 4 கோடியே 17 இலட்சத்து 69 ஆயிரத்து 131 ரூபா வருமானம் ஈட்டப்படுவதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார். (6)

# பொதுக் கூட்டமும் நிர்வாகசபை தெரிவும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வல்வை அ.மி.த.க. பாடசாலை பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நாளை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இக்கூட்டத்திற்கு பழைய மாணவர்கள் அனைவரையும் சமுகம் தருமாறு பழைய மாணவர் சங்க நிர்வாகிகள் கேட்டுக்கொள்கின்றனர். (2)

# கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9 மணிக்கு யாழ். கல்வி வலய முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலுக்கு மேற்குறித்த அனைவரையும் சமுகமளிக்குமாறு யாழ். கல்வி வலயப் பணிப்பாளர் அ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (2)

# கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பாடசாலைகளில் கல்வி பயிலும் பெற்றோரை இழந்த வறுமைக்கோட்டின் கீழ் உள்ள 30 மாணவர்களுக்கு கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவு எதிர்வரும் 31 ஆம்திகதி காலை 10 மணிக்கு கோப்பாய் மக்கள் நலன் காக்கும் அலுவலக மண்டபத்தில் வைத்து கற்றல் உபகரணங்களை வழங்கவுள்ளது.

இந்நிகழ்வானது கோப்பாய் மக்கள் நலன் காக்கும் பிரிவின் தலைவர் எஸ். சுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறும். (2-134)




## குடிநீருக்கு அலையும் குடிமக்கள்

கடந்த பல தசாப்த காலமாக மானிப்பாய் மேற்கில் கட்டுடைக் கிராமத்தில் வாழும் மக்கள் குடிநீர் இன்றி பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றார்கள். இவ்விடயம் தொடர்பாக உரிய அதிகாரிகள், அரசசேவைகள், தனியார் நிறுவனங்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தும் திருப்திகரமான எவ்வித நடவடிக்கையும் எவராலும் மேற்கொள்ளப்படவில்லை.

ஆயினும் இவ்விடயம் தொடர்பாக கட்டுடைக் கிராமம் அபிவிருத்திச் சங்கத்தினால் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு கடந்த பொதுத் தேர்தலிற்கு சில நாட்களுக்கு முன்பதாக கட்டுடைச் சந்தியில் UNHCR நிறுவனத்தினால் நிர்மாணிக்கப்பட்டு பாவிக்கப்படாமல் இருந்த நீர்த்தாங்கியை சுத்தம் செய்து நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையினால் குடிநீர் வழங்கல் ஏற்பாடு செய்யப்பட்டு கோலாகலமான முறையில் நீர்வழங்கல் வடிகால் அமைப்புச் சபைக்குப் பொறுப்பான அமைச்சர், சமூக சேவைகள் அமைச்சர் மற்றும் அதிகாரிகள் முன்னிலையில் திறந்துவைக்கப்பட்டது.

இதில் குறித்த நீர்த்தாங்கிக்கு சுன்னாகத்திலிருந்து நீர் வழங்கல், வடிகால் சபையினால் நாளொன்றுக்கு இருமுறை குடிநீர் நிரப்பப்பட்டு வந்தது. இச்சேவையினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் குடிநீரைப் பெற்று வந்தனர். திடீரென கடந்த சில மாதங்களுக்கு முன்பதாக குறித்த குடிநீர் சேவை எதுவித அறிவித்தலுமின்றி நிறுத்தப்பட்டுவிட்டது. இந்நடவடிக்கையால் கட்டுடை வாழ் மக்களும் அதைச் சூழவுள்ள மக்களும் குடிநீருக்காகப் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ் முக்கிய தேவையைப் பூர்த்தி செய்துகொள்ள சிறுவர்கள் தொடக்கம் முதியோர் வரை கொள்கலன்களுடன் அலைந்து திரிவதை காணக்கூடியதாக உள்ளது.

மேலும் தொற்று நோய்கள் பரவி வரும் இக்கால கட்டத்தில் அத்தியாவசியமான நன்நீரைப் பெற்றுக்கொடுக்க வேண்டிய பொறுப்பு உரிய அரச அதிகாரிகளின் கடமையல்லவா?

எமது பகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் கூட இவ்விடயம் தொடர்பாக எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே கட்டுடைச் சந்தியை சூழவுள்ள . குடிமக்களின் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா?

பாதிக்கப்பட்ட மக்கள்

# விரைவில் 170 நில அளவையாளர் வெற்றிடங்கள் நிரப்பப்படும்

## அமைச்சர் ஜனகபண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

நில அளவைத் திணைக்களத்தில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு விரைவில் 170 நில அளவையாளர் நியமனங்களை வழங்க உள்ளதாக காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தகவல் திணைக்களத்தில் நேற்று காலை நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின் போதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இந்த நியமனங்களை வழங்க அமைச்சரவை உபகுழுவும் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் விரைவில் நியமனங்களை வழங்க நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



நில அளவைத் திணைக்களத்தின் செயற்பாட்டுக்கு 850 நில அளவையாளர்கள் தேவைப்பட்ட போதிலும் தற்போது 444 அளவையாளர்களேகடமையில் உள்ளனர் எனவும் முதற் கட்டமாக 170 நியமனங்களை வழங்கி அதனைத் தொடர் ந்து படிப்படியாக நியமனங்களை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் உத்தியோகத்தர் களின் எண்ணிக்கை குறைந்த போதிலும் திணைக்களத்தின் அன்றாட நடவடிக்கைகள் தடையின்றி மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

# விமான எதிர்ப்பு ஏவுகணை கொள்வனவு செய்தவருக்கு 25 வருட சிறைத்தண்டனை

## அமெ.நீதிமன்றம் விதித்துள்ளது

(கொழும்பு)

இலங்கை விமானப்படையின் திடீர் விமானங்களை அழிப்பதற்காக ரஷ்யாவின் 20, இக்லா விமான எதிர்ப்பு ஏவுகணைகளை கொள்வனவு செய்ததாகக் கூறப்படும் ரி.தணிகாசலம் என்பவருக்கு அமெரிக்க நீதிமன்றம் 25 வருட சிறைத்தண்டனையை வழங்கியுள்ளது.

இவர் சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட காலத்தில் அகதிகளுக்கான உதவிச் சங்கம் என்ற அரச சார்பற்ற நிறுவனத்தின் ஊடாக இந்த ஏவுகணைகளை வன்னிக்குக் கொண்டு செல்லத் திட்டமிட்டிருந்தார் எனவும் அமெரிக்க அதிகாரிகள் இது குறித்து கனடிய புலனாய்வுப் பிரிவினருக்கு அறிவித்ததை அடுத்து அந்த அரச சார்பற்ற நிறுவனம் தடைசெய்யப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (6-2)

# வாக்குச் சாவடிகளிலேயே முடிபுகள் அறிவிக்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும்

## அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் காலத்தில் வாக்குச் சாவடிகளிலேயே வாக்குகள் எண்ணப்பட்டு முடிபுகள் அறிவிக்கப்படும் என அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

தேர்தல் முறை மாற்றம் தொடர்பான அரசாங்கத்தின் யோசனைத் திட்டங்களில் வாக்குச் சாவடிகளிலேயே முடிவுகளை அறிவிக்கும் திட்டமும் ஒன்றாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் இந்தத் திட்டத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சி இணக்கம் தெரிவித்துள்ளது.

17 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் நிறைவேற்று பிரதமர் முறைமை ஆகியன தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கும் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளதென அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாராளுமன்றிற்கு பொறுப்புச் சொல்லக் கூடிய ஓர் நிறைவேற்று அதிகார பிரதமர் முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை தொகுதி அடிப்படையில் எதிர்காலத்தில் தேர்தல் முடிவுகளை வெளியிட முடியும் எனவும் இறுதித் தேர்தல் முடிவு மாவட்டச் செயலகத்தின் ஊடாக வெளியிடப்படும் எனவும் பிரதி தேர்தல் ஆணையாளர் டபிள்யூ.பி. சுமனசிறி தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க வெளிநாட்டு விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பியதன் பின்னர் தேர்தல் முறைமை மாற்றம், அரசியல் சாசனத் திருத்தம் குறித்து இறுதிக் கட்ட பேச்சுவார்த்தைகள் நடத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (6-2)

# இனப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதியினால் அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை

## முஸ்லிம் காங்கிரஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உலக சமூகத்திற்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் இன்னமும் நிறைவேற்றப்படவில்லை என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

குறிப்பாக சர்வகட்சிப் பேரவையின் பரிந்துரைகளை ஆராய்ந்து தீர்வுத் திட்டங்களை வழங்குவதாக ஜனாதிபதி உறுதியளித்த போதிலும் இதுவரையில் குறித்த அறிக்கை தொடர்பில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என முஸ்லிம் காங்கிரஸின் பிரதிப் பொதுச் செயலாளர் நிசாம் காரியப்பர் தெரிவித்துள்ளார்.

யுத்தம் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வு காணும் விருப்பம் காணப்படுவதாக உலக நாடுகளுக்கு வெளிக்காட்டும் நோக்கில் ஜனாதிபதி சர்வகட்சிப் பேரவையை உருவாக்கியதாகவும் எனினும் பேரவையின் நடவடிக்கைகள் உரிய முறையில் முன்னெடுக்கப்படவில்லை எனவும் குற்றம் சுமத்தியுள்ளார்.

மேலும் சர்வகட்சிப் பேரவை தொடர்பில் ஆளும் கட்சியும் ஐக்கிய தேசியக் கட்சியும் தீர்மானம் ஒன்றை எடுக்க வேண்டிய காலம் மலர்ந்துள்ளதெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (6)

# த.தே.கூ - முஸ்லிம் காங்கிரஸ் இடையிலான பேச்சுவார்த்தை ஒத்திவைக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையிலான பேச்சுவார்த்தை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் சாசனத் திருத்தம் மற்றும் தேர்தல் முறைமை மாற்றம் தொடர்பில் இரண்டு கட்சிகளும் நேற்றைய தினம் பேச்சுவார்த்தை நடாத்தத் தீர்மானித்திருந்தன.

எவ்வாறெனினும், குறித்த பேச்சு வார்த்தை ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அநேகமான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பிற்கு வெளியே இருப்பதனால், பேச்சுவார்த்தைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார். (6-2)

# இளைஞர், யுவதிகளுக்கான வர்த்தக வேலைத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர், யுவதிகள் (18-35 வயதிற்கிடைப்பட்ட) தமது தொழில் முயற்சிகளை மேம்படுத்தவும், புதிதாக தொழில் முயற்சி ஒன்றினை (சிறியளவிலான) ஆரம்பித்தலை ஊக்குவிக்கும் முகமாகவும் யாழ்ப்பாணம் வர்த்தக தொழிற்துறை மன்றத்தினால் மேற்படி இலகு கடன் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

குறைவான வருமானம் பெறுகின்ற இளைஞர் ,யுவதிகளை இனங்கண்டு சிறந்த வர்த்தக நோக்கத்தினை நிறைவேற்றிக் கொள்வதனூடாக சுயதொழில்களை உருவாக்கி, பொருளாதார வளர்ச்சியினை ஏற்படுத்துவதனூடாக அவர்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்கு உதவுதலே மேற்படி திட்டத்தின் குறிக்கோளாகும். இத்திட்டத்திற்கு பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் பயனாளிகள் தெரிவுசெய்யப்படுகின்றனர்.

✠ 18-35 வயதிற்கிடைப்பட்ட இளைஞர், யுவதிகளாக இருத்தல் (பெண்கள் தலைமை வகிக்கும் குடும்பத்தவர்களுக்கு முன்னுரிமையளிக்கப்படும்)

✠ குறைவான வருமானம் பெறுவோராக இருத்தல்.

✠ தனது குடும்பத்தினை கொண்டு செல்ல உதவுபவராக இருத்தல்.

✠ சிறந்த வர்த்தக யோசனையைக் கொண்டிருத்தல்.

✠ மேற்படி யோசனையை சாத்தியப்படுத்திக் கொள்ள முடியாதிருத்தல் .

இத்திட்டத்தின் கீழ் பயனடைய ஆர்வமுள்ளோர் சாத்தியமான வர்த்தக முன்மொழிவுடன் இல 175, பருத்தித்துறை வீதி ,ஆனைப்பந்தி ,யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள யாழ்ப்பாணம் வர்த்தக தொழில்துறை மன்றத்தின் பிரதான நிறைவேற்று அதிகாரி கேட்டு கொள்கின்றார். (6-4)

# 29.07.2010

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

### நிகழ்வுகள்

- 1014 - பைசண்டைன் பேரரசன் இரண்டாம் பசில் பல்கேரிய இராணுவத்தினரைத் தோற்கடித்தான்.
- 1030 - டானியர்களிடம் இருந்து தனது முடியாட்சியைக் காப்பாற்றும் முகமாக நோர்வேயின் இரண்டாம் ஓலாப் சமரில் ஈடுபட்டு இறந்தான்.
- 1567 - முதலாம் ஜேம்ஸ், ஸ்கொட்லாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1830 - பிரான்சின் பத்தாம் சார்ள்ஸ் முடி துறந்தான்.
- 1848 - அயர்லாந்தில் "டிப்பெரரி" என்ற இடத்தில் பிரித்தானிய ஆட்சிக்கெதிரான கிளர்ச்சி அடக்கப்பட்டது.
- 1851 - 15 யுனோமியா என்ற சிறுகோள் கண்டுபிடிக்கப்பட்டது.
- 1899 - முதலாவது ஹேக் ஒப்பந்தம் நெதர்லாந்தில் ஹேக் என்ற இடத்தில் கைச்சாத்திடப்பட்டது.
- 1900 - இத்தாலியில் முதலாம் உம்பேர்ட்டோ மன்னர் கொலை செய்யப்பட்டார்.
- 1907 - சேர் பேடன் பவல் இங்கிலாந்தில் சாரணர் இயக்க முகாம் ஒன்றைத் திறந்து வைத்தார். இதுவே சாரணர் இயக்கத்தை ஆரம்பிக்க முதற்படியாக இருந்தது.
- 1921 - ஹிட்லர், ஜேர்மன் தேசிய சோசலிச தொழிலாளர் கட்சியின் தலைவரானார்.
- 1944 - இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1948 - இரண்டாம் உலகப் போர் காரணமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஒலிம்பிக் விளையாட்டுக்கள் மீண்டும் லண்டனில் ஆரம்பமாகின.
- 1957 - அணு சக்தியின் அமைதி வழி பயன்பாட்டினை ஊக்குவிக்கும் முகமாக பன்னாட்டு அணுசக்தி முகாமையகம் அமெரிக்காவில் ஆரம்பிக்கப்பட்டது.
- 1959 - ஐக்கிய அமெரிக்காவின் விண்வெளி நிறுவனம் நாசா ஆரம்பிக்கப்பட்டது.
- 1967 - வியட்நாம் போர்: வடக்கு வியட்நாமியக் கரையில் ஃபொரெஸ்டல் என்ற அமெரிக்கக் கடற்படைக் கப்பல் தீப்பிடித்ததில் 134 பேர் கொல்லப்பட்டனர்.
- 1967 - வெனிசுவேலா நாட்டின் 400ஆம் ஆண்டு நிறைவு நாள் கொண்டாட்டங்களின் நான்காம் நாளில் அங்கு இடம்பெற்ற நிலநடுக்கத்தில் 500பேர் கொல்லப்பட்டனர்.
- 1981 - வேல்ஸ் இளவரசர் சார்ள்ஸ் - டயானா திருமணம் நடைபெற்றது.
- 1987 - ஆங்கிலக் கால்வாயூடாக யூரோ சுரங்கம் அமைப்பதற்கான உடன்படிக்கையில் ஐக்கிய இராச்சிய பிரதமர் மார்க்கிரட் தாட்சர் மற்றும் பிரான்ஸ் அதிபர் பிரான்சுவா மித்தரான் ஆகியோர் கைச்சாத்திட்டனர்.
- 1999 - இலங்கையின் தமிழ் அரசியல்வாதி நீலன் திருச்செல்வம் தற்கொலை குண்டுவெடிப்பில் படுகொலை செய்யப்பட்டார்.
- 2005 - ஏரிஸ் (குறுங்கோள்) கண்டுபிடிக்கப்பட்டது.

### பிறப்புகள்


- 1883 - முசோலினி, இத்தாலிய சர்வாதிகாரி (இ. 1945)
- 1904 - ஜே.ஆ.டி. டாடா. இந்தியத் தொழிலதிபர் (இ. 1993)
- 1905 - டாக் ஹமாஷெல்ட், ஐக்கிய நாடுகள் அவையின் 2வது பொதுச் செயலர் (இ. 1961)

### இறப்புகள்

- 1913 - டோபியாஞ் மைக்கல் ஆசர், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1838)
- 1999 - நீலன் திருச்செல்வம், இலங்கையின் தமிழ் அரசியல்வாதி
- 2009 - காயத்திரி தேவி, ஜெய்ப்பூர் மகாராணி (பி. 1920)
- 2009 - ராசன் பி.தேவ். மலையாள நடிகர் (பி. 1954)



1987 - இலங்கை இனப்பிரச்சினைக்கான தீர்வாக இலங்கை - இந்திய ஒப்பந்தம் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கும் இலங்கை அதிபர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் இடையில் கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது.



1987 - இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி கொழும்பில் இடம்பெற்ற மரியாதை அணிவகுப்பின் போது இலங்கை இராணுவத்தினர் ஒருவரால் துப்பாக்கியால் தலையில் குத்தப்பட்டு காயம் அடைந்தார்.

# ரணிலை மீண்டும் வீழ்த்த மஹிந்த போடும் அரசியல் மறுசீரமைப்புத் தூண்டில்



தற்போது எம்மைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்கின்றனர். நாம் பேச்சுவார்த்தைக்குச் செல்லமாட்டோம். நாம் ஏன் பேச்சுவார்த்தைக்குச் செல்ல வேண்டும். எம்மைத் தாக்கிக் கொண்டுள்ள நிலையில், பேச்சுவார்த்தைக்கு அழைத்தால் எம்மால் செல்ல முடியாது. காரணம் குட்டக் குட்ட குனிபவனும் முட்டாள், குனிய குனிய குட்டுபவனும் முட்டாள். இது யாருடைய பேச்சும் அல்ல மஹிந்த ராஜபக்ஷவே தெரிவித்திருந்தார். அப்போது மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சிச் சேர்ந்த உறுப்பினராவார். அப்போது ஆட்சியிலிருந்த ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பேச்சுவார்த்தைக்கு அழைத்த போது மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.


தற்போது விமர்சித்துக் கொண்டுள்ள நிலையிலும், ஐக்கிய தேசியக் கட்சியை பேச்சுவார்த்தைக்கு அழைக்கும் அரசாங்கம், விமர்சனங்களைத் தாங்கிக் கொண்டிருக்கும் ஐக்கிய தேசியக் கட்சி, பேச்சுவார்த்தை என்றதும் ஓடிச் செல்கிறது. இவர்கள் இரு தரப்பினரும் முட்டாள்களா? அன்று குட்ட குனிபவன் முட்டாள் எனக் கூறிய மஹிந்த தற்போது ஐக்கிய தேசியக் கட்சியைப் பேச்சுக்கு அழைத்திருப்பது முட்டாள் தனத்தில் அல்ல. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நிறைவேற்று அதிகாரம் கொண்ட அரசியலமைப்பை வலுப்படுத்தி இரண்டு தடவைகளுக்கு மேல் அந்தப் பதவிக்காக போட்டியிடும் வகையில் அரசியலமைப்பை மாற்றியமைக்க ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தன்பக்கம் இழுக்க சகல விளையாட்டுக்களையும் விளையாடிப் பார்த்தார். எனினும், அது தோல்வியடைந்தது.

போதாக் குறைக்கு அரசாங்கத்திலுள்ள இடதுசாரி கட்சிகளும் அரசியலமைப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்தன. இடதுசாரிகளை காரணம் காட்டி ஆளும் கட்சியிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்கியின் சில தலைவர்கள் அரசியலமைப்பு சீர்திருத்தத்தை சீர்குலைக்க முயற்சித்தனர். இதனால், மகிந்த உண்மையில் பயந்துபோனார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்று பொதுத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை நெருங்கி, வலுவாக இருந்த போதிலும் அவருக்கு மூன்று விடயத்தில் அச்சம் இருந்தது. அவர் அரசியலமைப்புத் திருத்தத்தில் கை வைத்த பின்னர் இடதுசாரிக் கட்சிகள் அரசாங்கத்தில் இருந்துகொண்டு அவருக்கு எதிர்ப்பை ஏற்படுத்தி வந்தன. அரசாங்கத்திலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராக இடதுசாரி கட்சிகளைத் தூண்டிவிட்டமை அரசாங்கத்திற்குள் இருந்துவரும் சமிக்ஞைகள் என அவரின் முதலாவது அச்சம் அமைந்திருந்தது.

ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளரின் நிபுணர் குழு, மற்றும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை நிறுத்தப்படுவது தொடர்பாக ஏற்படுத்தப்பட்ட சர்வதேச எதிர்ப்புகள் ராஜபக்ஷ எதிர்நோக்கிய இரண்டாவது அச்சமாகும்.

ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் தமது அதிகாரத்தை ஆறு வருடங்களுக்குள் வலுப்படுத்திக் கொண்ட பின்னர் சர்வதேச சமூகம் தன்னுடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியில்லை என அவர் முதலில் நினைத்தார். ஜி.எஸ்.பி. பிளஸ் ரத்துச் செய்யப்பட்டமை மற்றும் பான்



கீன் மூனின் நிபுணர் குழு என்பன தான் நினைத்தது தவறு என அவரை உணரச் செய்திருக்கும்.

தமது அரசாங்கத்திற்கு எதிராக டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர்களும் அச்சமடைவார்கள் என ஜனாதிபதி நினைத்திருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சி மஹிந்தவின் சட்டைப் பைக்குள் என்றால் நாமும் சட்டைப் பைக்குள் இறங்குவதைத் தவிர மாற்று வழியில்லையென இவர்கள் நினைப்பார்கள் என்பது மஹிந்தவின் எண்ணம்.

புதிய அரசியலமைப்பு திருத்தத்தை ஏற்படுத்த 17ஆவது அரசியலமைப்புத் திருத்தம் குறித்து இரண்டு பிரதான கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்துகின்றன எனக் வெளிகாட்டிக் கொண்டால், ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை வழங்க ஐக்கிய ஒன்றியம் விதித்த பிரதான நிபந்தனையை நிறைவேற்று அரசாங்கம் முயற்சிக்கிறது என நினைத்து சர்வதேச சமூகம் திருப்திகொள்ளும் என நினைத்து ஜனாதிபதி தனது இரண்டாவது அச்சத்தைப் போக்கிக் கொண்டார்.

அரசியலமைப்புத் திருத்தம் தொடர்பான பேச்சுவார்த்தைகள் நீடித்துச் செல்லும்போது ஜி.எஸ்.பி. பிளஸ் கிடைத்து. பான் கீ மூனும் தனது குழுவை பின்வாங்கிக் கொள்வார் என மஹிந்த நினைத்திருக்கலாம்.

அரசியல் சாசன திருத்தத்திற்கு எதிரான ஐக்கிய தேசியக் கட்சியை தனது பைக்குள் போட்டுக் கொண்டு பொது எதிர்க்கட்சிகளின் அரச எதிர்ப்பை சீர்குலைத்ததன் மூலம் ஜனாதிபதி தனது மூன்றாவது அச்சத்தைப் போக்கிக் கொண்டார்.

ஐக்கிய தேசியக் கட்சியை பேச்சு



வேண்டும். மஹிந்த ராஜபக்ஷவுடன் மாத்திரமல்ல சந்திரிகாவுடன் நடைபெற்ற அரசியலமைப்புப் பேச்சுவார்த்தைகளின் போது தன்பக்கம் இழுத்துக் கொண்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

இந்தப் பேச்சுவார்த்தை கூட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசாங்கப் பக்கம் இழுக்கும் மஹிந்தவின் தூண்டிலாகும். 1994ம் ஆண்டு சந்திரிக்காவின் அரசாங்கம் அரசியலமைப்பில் திருத்தம் செய்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண ஐக்கிய தேசியக் கட்சியை அழைத்து பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்தது பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு சிறிது காலத்தில் ரணிலுக்கு எதிராக கட்சிக்குள் கிளர்ச்சி ஏற்பட்டது. அந்தக் கிளர்ச்சியை ரணில் அடங்கிய போது சரத் அமுனுகம, விஜேபால மெண்டிஸ், சுசில் முனசிங்க ஆகிய கிளர்ச்சியா

## ஐ.தே.க எம்.பி.க்களை தன்பக்கம் இழுக்கும் ஜனாதிபதி மஹிந்தவின் முயற்சி தோல்வி

சர்வதேச எதிர்ப்புப் புயல் வீச ஆரம்பித்தால் தனது அரசாங்கம் அதில் அடித்துச் செல்லக் கூடும் என அவர் அஞ்சியிருக்கக் கூடும். அரசியலமைப்புத் திருத்தம் என்ற கோசத்தை முன்வைத்து ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பி.யும் இணைந்து பொது எதிர்க்கட்சியொன்றை ஏற்படுத்தி விரைவில் நடத்தப்படவுள்ள உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்னர் வீதியில் இறங்கக் கூடும் என ஜனாதிபதி அஞ்சினார்.

உண்மையில் அரசியலமைப்புத் திருத்தத்திற்கு எதிராக பாரிய எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள சகல எதிர்க்கட்சிகளும், சிவில் அமைப்புகளும் தயாராகியிருந்தன. இந்த எதிர்ப்பு நடவடிக்கை வெற்றியளித்தால் அரசாங்கத்திலிருக்கும் இடதுசாரிகளும், அதில் இணைந்து கொள்ளக் கூடும் என்ற அச்சம் மஹிந்தவிற்கு ஏற்படுவது இயற்கையானதே.

இந்த அச்சங்கள் காரணமாகவே அவர் ரணில் விக்கிரமசிங்கவைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். ஐக்கிய தேசியக் கட்சியை கைக்குள் போட்டுக் கொண்டால் அரசாங்கத்திற்குள் இருக்கும் அரசியலமைப்பு திருத்தத்திற்கு எதிரான இடதுசாரி கட்சிகள் மத்திரமல்லாது அதிகாரங்கள் பறிக்கப்பட்டதால் இடதுசாரிக் கட்சிகளின் போர்வையில் அரசியலமைப்புத் திருத்தத்தை குழப்பும் முயற்சியில் ஈடுபட்



வார்த்தைக்கு அழைத்து அதனை தனது பைக்குள் போட்டுக் கொண்ட மஹிந்த தனக்கிருந்த மூன்று அச்சத்தையும் போக்கிக் கொண்டுள்ளார். ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வெற்றிக்காக பாடுபட்டதால் அரசாங்கம் தம்மைப் பழி தீர்ககும் என்ற மரண அச்சத்தில் உள்ள கிராமப் புறத்தைச் சேர்ந்த ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்களுக்கு இந்தப் பேச்சுவர்ர்த்தைகள் மூலம் என்ன கிடைக்கப் போகின்றன? ஐக்கிய தேசியக் கட்சி பேச்சுக்கு செல்ல முன்னர் இதுகுறித்து சிந்தித்திருக்க

ளர்கள் ரணிலின் தலைமைத்துவத்தின் கீழ் தமக்கு எதிர்காலம் இல்லையெனக் கூறி அரசாங்கத்துடன் இணைந்து கொண்டனர்.

அப்போது நாடாளுமன்றத்தில் ஒரேயொரு நாடாளுமன்ற உறுப்பினரை மேலதிகமாகக் கொண்டிருந்த சந்திரிகாவின் அரசாங்கம் தனது பெரும்பான்மையை வலுப்படுத்திக் கொண்டது. 1999ஆம் ஆண்டும் சந்திரிகாவின் அரசாங்கம் அரசியலமைப்பு மாற்றம் தொடர்பாக பேச்சுவார்த்தையொன்றை ஆரம்பித்தது.

உபுல் ஜோசப் பெர்னாண்டோ

2000ஆம் ஆண்டு அரசியலமைப்பை நிறைவேற்றிக் கொள்ள ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்த ரணிலுக்கு எதிரான சிலரை சந்திரிகாவின் அரசாங்கம் தன்பக்கம் இழுத்துக் கொண்டது. 2005ஆம் ஆண்டு ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்ட மஹிந்த இரு தரப்பு இணக்கமொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சியைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்திருந்தார். ரணிலுக்கு எதிராக கட்சிக்குள் கிளர்ச்சி ஏற்பட்டிருந்த போதே இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ரணில் இந்தக் கிளர்ச்சியை அடக்கினார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# கடல் கடந்த தமிழும் தமிழரும் ③

செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

முனைவர்
இரத்தினம் நித்தியானந்தன்
M.Sc.PhD.(London)

தொலைக்காட்சி வானொலி என்பவற்றி னூடாக உடனுக்குடன் தமிழ்ச் செய்திகளை அறியக் கூடியதாக இருக்கின்றது. பிள்ளை களும் தமிழ் மொழியை அறிவதற்கும், பேசு வதற்கும், தமிழ் நிகழ்ச்சிகளில் பங்குபற்று வதற்கும் இவை பெரும் பங்காற்றி வரு கின்றன எனலாம். தீபம், GTV எனும் இரு தொலைக்காட்சிகள் ஐரோப்பிய நாடு களை மையமாகக் கொண்டு லண் டனில்




இயங்கி வருகின்றன. திரு நாடா மோகன் நடாத்தும் First Audio Satellite வானொலி மூலமாக ஆயிரக்கணக்கான இளஞ்சிறார் கள் தமிழ் கற்கவும், தமிழ் அறிவிப்பாளர்க ளாக வரவும் ஊக்கம் கொடு க்கப்பட்டு வருகின்றது. இது தவிர Sun Rise, IBC போன்ற வானொலிகளும் இங்கு தமிழ் வானொலிகளாக இயங்கி வருகின்றன.

தமிழ்ப்பாடசாலைகள் தவிர தனியாரி னால் நுண்கலை நிறுவனங்கள் பல நடாத் தப்பட்டு வருகின்றன. இந்நிறுவனங்களில் பயிற்றப்பட்டு வருகின்ற கலைகள் தமிழ் மொழியோடும், சைவ மதத்தோடும் இணை ந்து காணப்படுவதால் தமிழ் பற்றிய சிந்த னை இங்கும் காணப்படுகின்றதென்றே கூற லாம். இவைதவிரபல சமூக நிறுவ னங்களும் இத்தகைய பங்களிப்பையே செய்து வருகி ன்றன.

புலம்பெயர் நாட்டின் பல பாகங்களிலும் தமிழ் பத்திரிகைகள், சஞ்சிகைகள், நூல் கள், மொழிபெயர்ப்பு இலக்கியங்கள் என்பன வெளியிடப்பட்டு வருகின்றன. பிரித்தானி யாவை மையமாகக் கொண்டு பத்திரிகை களும், மாதாந்த சஞ்சிகைகளும் வெளி வந்து கொண்டிருக்கின்றன. ஆரம்பத்தில் **தமிழன்** என்ற பத்திரிகை வெளி வந்தாலும் தொடர்ந்து அது வெளிவரவில்லை. இன்று **புதினம்** எனும் பத்திரிகை பன்னிரண்டு ஆண்டுகளாக பாமா ராஜகோபால் என்ப வரால் வெளியிடப்பட்டு வருகின்றது. இது தவிர இலண்டன் குரல், ஒரு பேப்பர், வடலி, உதயன், அருவி, காலைக்கதிர் போன்ற பத்திரிகைகள் வெளிவருகின்றன.

Tamil Times எனும் பத்திரிகை இரு பது வருடங்களாக வெளிவந்து கொண்டிரு ந்தது. ஆனால் தற்போது அது வருவதில்லை. இப்போது The Tamil Guardian எனும் ஆங்கிலப்பத்திரிகையும் தமிழரை மையமா கக் கொண்டு நடாத்தப் படுகின்றது. மாதாந்த சஞ்சிகைகளாக லண்டன் முரசு, கலசம், சுட ரொளி, தமிழர் தகவல், தேசம் என்பன பதிப் பிக்கப்படுகின்றன.

விளம்பர ஏடுகளாகத் தமிழ் ஓலை, முரசம் என்பன வருடந்தோறும் வெளியிடப்படுகின் றன. இவற்றில் லண்டனில் உள்ள வர்த் தக நிலையங்கள், பாடசாலைகள், கோயில்கள் போன்றவற்றின் விபரங்களை அறியலாம். என். செல்வராஜா என்பவரால் நூல்தேட்டம் எனும் நூற்தொகுதி ஆறு தொகுதிகளாக உருவாக்கப்பட்டுள்ளது.

இங்கு ஈழத்தமிழர்களினால் வெளியிடப் பட்ட, வெளியிடப்பட்டு வருகின்ற அனைத்து நூல்களின் பட்டியல்களும் இடம் பெற்று ள்ளன. இவை தவிர தரமான நூல்களும் வெளி வந்த வண்ணமுள்ளன.

வார இறுதி, நாட்களில் நூல் வெளி யீடுகள், நூல் கண்காட்சிகள் இடம்பெற்று வருகின்றன. இவை தமிழரிடையே வாசிப் புப் பழக்கத்தை பெரிதும் வளர்ப்பதற்கு உதவி வருகின்றன. இவற்றுடன் இணை யத் தளங்களும் தமிழ் மொழி வளர்ச்சியில் பெரும் பங்காற்றுகின்றனவென்று கூறலாம்.

நிறைவாக, இக்கட்டுரையாசிரியர் 1966 ஆம் ஆண்டு புலம்பெயர்ந்து லண்டனில் இதுவரை காலமும் வாழ்கின்ற அனுபவ ரீதியில் பொதுவாக லண்டனையும் தமிழரை யும் ஒப்பு நோக்கும் போது அன்று இருந்த இனத்துவேச சிந்தனை இந்த நாட்டில் இன்று மிகக் குறைந்தே காணப்படுகின் றதெனக் கூறலாம். கால கட்டதிற்கேற்ப இந்நாட்டு மக்கள் பல்லின சமூக மக்களுடன் வாழப் பழகி விட்டார்கள். இதன் காரணமாக ஐரோப்பிய நாடுகளில் குடியிருக்கும் தமி ழர்கள் கூட அந்தந்த நாடுகளில் குடியுரிமை பெற்ற பின்னர் இங்கிலாந்துக்குக் குடியேற விருப்புக் காட்டி வருகின்றனர். கல்வி கற்ப தற்கும், பல்கலைக்கழகப் பட்டப்படிப்பிற்கும் வேலை வாய்ப்பிற்கும் ஒரு சிறந்த நாடாகப் பிரித்தானியா அமைகிறது.

இந் நிலையில் தற்போதைய இளம் பெற்றோர்களுக்கும்பிள்ளைகளுக்குமிடையே சிந்தனை மனோபாவம் என்பன வேறுபட்டே காணப்படுகின்றன. பெற்றோரால் சொந்த நாட்டு வாழ்க்கையை முற்று முழுதாக புறம் தள்ளி இங்கு வாழ முடியவில்லை. ஆனால் பிள்ளை களுக்கோ பெற்றோரின் ஆதங்கம் புரிய வில்லை. இந்தப் போக்குக் குடும்பத்துள் நாளாந்தம் பல சிக்கல்களை ஏற்படுத்தி வருகின்றது. இந்நிலைமை தொடர்ந்து வரு வதால் எதிர்காலச் சந்ததியினர் தமிழ், தமிழ்ச்சமூகம், தமிழ் மக்கள், தமிழ் உறவு கள் எனப் பேணத் தலைப்படுவார்கள் என் பது சந்தேகமே.

சங்கம் வைத்து தமிழ் வளர்த்த சமூகம், நாடு கடந்தும் தமிழ் அரசாட்சிகளை நிறுவி வந்த சமூகம், இன்று குறிப்பிட்ட பிரதேசங் களுக்கிடையே முடங்கிப் போயுள்ளது என் பது வரலாற்று உண்மையாகும். உலகின் எப்பாகத்திலும் இன்று தமிழர்களைக் காண லாம். ஆனால் இத்தமிழருக்கென்று உலகில் தனித்துவமான இடமில்லை என்பது மிகச் சோகமே. இவர்களுக்கென்று ஒரு நாடு இருக்குமேயானால் தமிழ்மொழி, பண்பாடு, நாகரிகம் யாவும் பேணச் சந்தர்ப்பம் இலகு வானதாக அமையும். எமக்கென்று ஒரு நாடில்லை என்ற சோகம் புலம்பெயர்ந்த ஈழத்தமிழன் ஒவ்வொருவனதும் நெஞ்சிலும் வேதனையாகவேயுள்ளது. எங்களது இந்த ஏக்கத்திற்குச் சரித்திரம் தான் பதில் சொல்ல வேண்டும். (முற்றும்)

## அமெரிக்க பொலிஸாரினால் இலங்கையர் அறுவர் கைது

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த ஆறு சட்ட விரோதக் குடியேறிகளை அமெரிக்கக் பொலிஸார் கைது செய்துள்ளதாகத் தெரி விக்கப்படுகிறது.

குறித்த இலங்கையர்கள் படகு மூலமாக அமெரிக்காவின் பாம் ஐலண்ட் பகுதிக்குள் பிரவேசித்திருக்க வேண்டுமென குறிப்பிடப் படுகிறது.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் இருபது முதல் நாற்பது வரையிலான வயதுடைய இலங்கையைச் சேர்ந்த ஆண்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அனைவரும் சிறந்த உடல் ஆரோக்கியத்துடன் காணப்படுவதாகவும் எல்லைக்கு அப்பாலான கடல் பகுதியிலி ருந்து இவர்கள் நீந்தி கரையை அடைந் திருக்கலாம் எனவும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த நபர்களிடம் இலங்கை மற்றும் அமெரிக்க நாணயத்தாள்களும் கையடக்கத் தொலைபேசிகளும் காணப்படுவதாகவும் கைது செய்யப்பட்ட இலங்கையர்கள் பொலிஸ் விசாரணைக்கு முழுமையான ஒத்துழைப் பை வழங்கத் தவறியுள்ளதாகவும் தெரிவிக் கப்பட்டுள்ளது. (6)

## இடம்பெயர்ந்தவர்களுக்கான நிவாரணத்தை அதிகரிக்க உலக உணவுத்திட்டம் இணக்கம்

### அமைச்சர் முரளிதரன் தெரிவிப்பு



(கொழும்பு)

இடம்பெயர் மக்களுக்கான உணவு நிவாரம் அதிகரிக்கப்படு மென உலக உணவுத்திட்டம் அறிவித்துள்ளது.

இதுவரை காலமும் வழங்கப்பட்டு வந்த உணவு நிவாரணத்தை மேலும் அதிகரிப் பதற்கு உலக உணவுத்திட்டம் இணங் கியுள்ளதாக மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள் ளார்.

அரிசி, கோதுமை மா, பருப்பு, மரக்கறி எண்ணெய் , சீனி மற்றும் வெங்காயம் போன்ற உணவுப் பொருட்கள் அதிகளவில் வழங்கப்படவுள்ளது.

உலக உணவுத் திட்டத்தின் வதிவிடப் பிரதிநிதி அன்டான் கானுடன், மீள் குடி யேற்ற பிரதி அமைச்சர் நடத்திய பேச்சுவார்த் தைகளின் விளைவாக உணவு நிவாரணம் அதிகரிகப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள் ளது.

இதேவேளை, யாழ்ப்பாண மக்களுக்கு குடிநீர்த்தேவையைப் பூர்த்தி செய்ய திட்ட மொன்றை நடைமுறைப்படுத்துமாறு அமை ச்சர் முரளிதரன் உலக உணவுத்திட்டத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார் எனக் குறிப் பிடப்படு கிறது. (6)

## ரணிலை மீண்டும் வீழ்த்த...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரணிலின் தலைமைத்துவத்தின் கீழ் தமக்கு எதிர்காலம் இல்லையெனத் தெரிவித்த கிளர்ச்சிக்காரர்கள் அரசாங் கத்துடன் இணைந்துகொண்டனர். ஜே.வி.பியின் 39 நாடாளுமன்ற உறுப் பினர்களின் ஆதரவில் இயங்கிவந்த அரசாங்கம் ஐக்கிய தேசியக் கட்சி யின் உறுப்பினர்களைத் தன்பக்கம் இழுத்துக் கொண்டதன் மூலம் பெரும் பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொண்டது.

இம்முறை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவிக்காக மூன்றாவது முறையும் போட்டியிடும் வகையில் அரசியலமைப்பில் திருத் தத்தை மேற்கொள்ள ஐக்கிய தேசியக் கட்சிக்குத் தெரியாமலேயே அதன் நாடாளுமன்ற உறுப்பினர் களைத் தன் பக்கம் இழுக்க மஹிந்த பல வழி முறைகளைக் கையாண்டார். இம் முறையும் ரணிலுக்கு எதிராக கட்சிக் குள் கிளர்ச்சிவெடித்திருந்தது.

ரணிலுக்கு எதிராக கிளர்ச்சியில் ஈடுபட்டுள்ள யானைக் குட்டிகளைத் தன்பக்கம் இழுக்க மஹிந்த கனவு கண்டுகொண்டிருந்தார். எனினும், கட்சியின் தலைவர் பதவிமுதல் அனைத்துப் பதவிகளும் தேர்தல் மூலம் தெரிவுசெய்யப்பட வேண்டும் என்ற யோசனையை முன்வைத்து கட்சியை ஜனநாயக மயப்படுத்தும் பரிந்துரை காரணமாக கிளர்ச்சியில் ஈடுபட்டவர்களுக்கு ஒரு எதிர்பார் ப்பு ஏற்பட்டது. அவர்கள் கட்சிக்குள் இருந்தே தமது எதிர்ப்பை நிறை வேற்றிக்கொள்ளலாம் என மனதைத் தேற்றிக்கொண்டனர்.

இதனால் மஹிந்தவின் திட்டங்கள் அனைத்தும் வீணாகிப் போனது. எனினும், அவர் தளரவில்லை. அவர் 2005ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களை தம்வசம் இழுப்பதற்காக போட்ட தூண்டிலை இப்போதும் கையில் எடுத்துக் கொண் டுள்ள மஹிந்த ரணிலைப் பேச்சு வார்த்தைக்கு அழைத்து அந்த பழைய தூண்டிலில் புதிய குழுவை மாட்டி அதனைத் தண்ணீரில் போட்டார்.

ரணிலைக் கட்சிக்குள் பலமிக்கவ ராக மாற்றி ரணில் ஊடாகவே கிளர்ச்சி அடங்கினால் கிளர்ச்சியில் ஈடுபட்ட உறுப்பினர்களை தம்பக்கம் இழுக் கலாம் என மஹிந்த நினைக்கின்றார். இதற்காக மகிந்த ரணிலைக் கொண்டு ஐக்கிய தேசியக் கட்சியின் யாப்பில் மாற்றங்களை ஏற்படுத்த மறுசீரமைப் புக் குழுவொன்றை ஏற்படுத்தினார். அந்த குழுவில் இணைத்து வித்தியா சமான முனைப்பை மேற்கொண் டார்.

2005ஆம் ஆண்டைப் போல தூண்டில்களில் கிளர்ச்சியாளர்களை சிக்கவைப்பது மஹிந்தவிற்கு தற் போது இலகுவான காரியமல்ல. இறுதி யில் குனிய குனியக் குட்டுபவன் முட்டாள் என அவர் நினைப்பாரோ எனத் தெரியவில்லை.


## ஞானச்சுடர் வெளியீடு


(மருதங்கேணி)

தொண்டமானாறு செல்வச் சந்நிதி ஆலய சூழலில் அமைந்திருக்கும் சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் ஒவ்வொரு மாதமும் வெளி யிடப்படும் ஆன்மீக சஞ்சிகையான ஞானச் சுடர் ஆடிமாத இதழ் நாளை வெள்ளிக் கிழமை காலை 10.30 மணிக்கு வெளி யிடப்படவுள்ளது.

இதன் வெளியீட்டுரையை சைவப்புலவர் செல்வி.க.சசிலேகா ஆற்றுவார்.

மதிப்பீட்டுரையை கௌரி சுரேசன் ஆசிரியர் நிகழ்த்துவார் எனத் தெரிவிக்கப் படுகிறது. (2-35)





கிறிஸ்தவ உதவி நிறுவனத்தின் அனுசரணையுடன் சொண்ட் நிறுவனத்தினால் ஊர்காவற்துறை பிரதேசத்தில் மீள்குடியமர்ந்த 15 பயனாளிகளுக்கு விவசாய உபகரணங்கள் வழங்கப்பட்டது இந்நிகழ்வில் ஊர்காவற்துறை உதவி அரசாங்க அதிபர் சிறிமோகனன் ஆரம்ப உரை நிகழ்த்துவதையும் பாராளு மன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரீன் விவசாயத்திற்கான உபகரணங்களை பயனாளிகளுக்கு வழங்குவதையும் அருகில் சொண்ட் நிறுவன திட்டப் பணிப்பாளர் மற்றும் திட்டமுகாமையாளர் ஆகியோரை படங்களில் காணலாம்.

## நல்லிணக்க ஆணைக்குழுவின் விசாரணை ஓகஸ்ட் 11இல் ஆரம்பம்

(கொழும்பு)

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முதலாவது பகிரங்க விசாரணை லக்ஸ்மன் கதிர்காமர் நிலையத்தில் உள்ள அதன் செயலகத்தில் எதிர்வரும் 11ஆம் திகதி முதல் தொடர்ந்து 3 நாட்கள் நடைபெறவுள்ளது.

இந்த விசாரணையின் போது 20 பேர் ஆணைக்குழு முன்னிலையில் வாக்குமூலம் அளிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை இந்த மூன்று நாள் அமர்வில் ஆறு பேர் மாத்திரம் அவ் வாக்கு மூலம் அளிப்பர் என ஆணைக்குழுவின் செயலாளர் எஸ்.எம்.சமரகோன் தெரிவித்துள்ளார்.

அமர்வின் போது பொதுப்பாதுகாப்பு உணர்ச்சியூட்டக்கூடிய தேசிய விடயங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்தும் வீடியோ காட்சிப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு-கிழக்குப்பகுதிகளுக்கான அமர்வுகள் அடுத்த மாதம் இறுதிப் பகுதியில் இடம்பெறும் எனவும் இப்பகுதிகளுக்கான அமர்வுகள் பற்றிய ஏற்பாடுகள் குறித்து அப்பகுதிப் பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எட்டு அங்கத்தவர்களைக்கொண்ட ஆணைக்குழுவின் தலைவராக முன்னாள் சட்ட மா அதிபர் சி.ஆர்.டி.சில்வா உள்ளாரென தெரிவிக்கப்படுகிறது. (6)

## முன்னாள் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் சுவீடன் விஜயம்

(கொழும்பு)

இலங்கையைச் சேர்ந்த மூன்று முன்னாள் சிரேஸ்ட அதிகாரிகள் சுவீடனுக்கு விஜயம் செய்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

சுவீடன் வெளிவிவகார அமைச்சர் கால் பேல்ட் மற்றும் நோர்வே சுற்றாடல் அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோருடன் இந்த இராணுவ உயரதிகாரிகள் சந்திப்புக்களை நடத்தவுள்ளனர் என்றும் இலங்கையின் தற்போதைய சூழ் நிலை குறித்து விசேட பேச்சுவார்த்தைகள் நடத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இச்சந்திப்புக்களின் போது ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகம் பான் கீ மூனால் நியமிக்கப்பட்டுள்ள ஆலோசனைக் குழுத் தொடர்பிலும் கவனம் செலுத்தப்படவுள்ளது. இதேவேளை ஆலோசனைக் குழுவின் நடவடிக்கைகளுக்கு எதிராக ஆதரவு திரட்டும் நோக்கில் அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (6)

## வடக்கு மக்களின் ஜனநாயக உரிமைகள் உறுதிப்படுத்தப்படவேண்டும் – ஜே.வி.பி

வடக்கு மக்களின் ஜனநாயக உரிமைகளை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென ஜே.பி.வி கோரிக்கை விடுத்துள்ளது.

பிரதான அரசியல் கட்சிகளுடன் வடக்கு மக்கள் தொடர்புகளை பேணுவதனை தடுப்பதற்கு இராணுவப் பலத்தைப் பயன்படுத்தக் கூடாது என ஜே.வி.பி ஊடக அறிக்கை ஒன்றின் மூலம் சுட்டிக்காட்டியுள்ளது.

ஜே.வி.பி உறுப்பினர்கள் அண்மையில் கிளிநொச்சிக்கு விஜயம் செய்திருந்த போது அவர்களுடன் தொடர்புகளைப் பேணிய மக்களிடம் இராணுவத்தினர் விசாரணை நடத்தியுள்ளதாக கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. இவ்வாறான நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்ள முடியாது என அக்கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

ஜே.வி.பி உறுப்பினர்களுடன் கிராமத்தில் யார் யாருக்குத் தொடர்பு காணப்படுகின்றதென்பது குறித்து விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க தலைமையிலான குழுவினர் வடக்கிற்கு விஜயம் செய்திருந்த போது மக்களை சந்திக்க விடாது தடைகள் ஏற்படுத்தப்பட்டிருந்தாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

## ஒலுவிலில் கடற்படைமுகாம் அமைக்கப்பட்டமைக்கு பள்ளிவாசல் நிர்வாகிகளும் மீனவர்களும் கடும் எதிர்ப்பு

(கொழும்பு)

இலங்கையின் கிழக்கே அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் மட்டும் வசிக்கும் ஒலுவில் பிரதேசத்தில் கடற்படை முகாமொன்று அமைக்கப்பட்டிருப்பது குறித்து பள்ளிவாசல் நிர்வாகிகளும், உள்ளூர் மீனவர்களும் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

ஏற்கெனவே தென்கிழக்கு பல்கலைக் கழகம் அமைந்துள்ள இப் பிரதேசத்தில் தற்போது துறைமுகமொன்றும் அமைக்கப்பட்டு வருவதால் இப்பகுதி கேந்திர முக்கியத்துவம் பெற்ற பிரதேசமாக கருதப்படுகின்றது.

சுனாமியினால் பாதிக்கப்பட்டு கைவிடப்பட்ட பாடசாலை கட்டடமொன்றிலேயே கடற்படையினர் முகாமிட்டிருப்பதை காணக் கூடியதாக உள்ளது.

ஆனால் இப்பாடசாலைக் கட்டடத்தில் மதரசாவும், பாலர் பாடசாலையொன்றும் நடைபெற்று வந்ததாகக் கூறும் ஒலுவில் பெரிய பள்ளிவாசல் தலைவரான அபுபக்கர் லெப்பை இஸ்மாயில், கடற் படையினர் தங்கள் பகுதியில் முகாமிட்டிருப்பது பிரதேசத்தின் இயல்பு நிலைக்கு தடையாக அமையலாம் என அச்சம் வெளியிட்டுள்ளார்.

மீனவர்கள் மீது கட்டுப்பாடு விதிக்கப்பட்டு சுதந்திரமாக தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்படக்கூடிய சூழ்நிலை தென்படுவதாகவும் ஜனாதிபதிக்கு இது தொடர்பாக கடிதம் மூலம் அறிவித்துள்ள போதிலும் எவ்வித சாதகமான பதிலும் இது வரை கிடைக்க வில்லை என்றும் தெரிவித்தார்.

கடற்படைத் தளபதி இம்முகாமிற்கு வந்திருந்த போது அவரை சந்தித்து இது பற்றி பேச்சுவார்த்தை நடத்தியதாக கூறும் பள்ளிவாசல் செயலாளரான அப்துல் ரகீம் கடற்படைத் தளபதி தங்கள் கோரிக்கையை நிராகரித்து அளித்த் பதில் ஏமாற்றத்தையும் கவலையையும் தந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கெனவே கடற்படை முகாம்கள் அமைந்துள்ள கிராமங்களில் அவ்வப்போது மீனவர்களுக்கும், கடற்படையினருக்கு மிடையில் ஏற்படுகின்ற மோதல்களும் முரண்பாடுகளும் இந்த பிரதேசத்திலும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடும் என்ற அச்சம் உள்ளூர் மீனவர்களிடம் பொதுவாக நிலவு கின்றது.

இதேவேளை தேசிய பாதுகாப்பு என்ற விவகாரத்தில் சமரசம் என்ற பேச்சுக்கே இடமில்லை. எவ்வாறான பாதுகாப்புத் தேவை, என்ன செய்யவேண்டும் என அரசாங்கமே தீர்மானிக்கும் அதற்காக எத்தகைய சொத்துக்கள் சுவீகரிக்கப்படவேண்டுமோ அவற்றைச் சுவீகரிக்கும் என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் மரமுந்திரிகைக் கூட்டுத் தாபனத்திற்குச் சொந்தமான ஆயிரத்து 50 ஏக்கர் கடற்படையினரால் சுவீகரிக்கப்பட்டமை தொடர்பில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றின் போதே அமைச்சர் மேற்கண்ட பதிலைத் தெரிவித்துள்ளார். (6)

## பாதாள உலக குழுவின் முக்கிய உறுப்பினர்கள் கைது

(கொழும்பு)

மூன்று முக்கிய பாதாள உலகக் குழு உறுப்பினர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர். கொலன்னாவை மற்றும் கொட்டாஞ்சேனை ஆகிய பிரதேசங்களில் இயங்கி வந்த பாதாள உலகக் குழு உறுப்பினர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்கள் பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இவர்களிடமிருந்து பல்வேறு நவீன ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த பாதாள உலகக் குழு உறுப் பினர்கள் ஆயுத விற்பனை உள்ளிட்ட குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்கள் எனவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (6)





யாழ்.றோட்டறிக் கழகத்தினரும் நகர் மைய றோட்டறிக் கழகத்தினரும் இணைந்து கிளிநொச்சியின் திருவையாறு யூனியன் குளம் மற்றும் அக்கராயன் பகுதிகளில் மீள்குடியமர்ந்த கைக்குழந்தைகளையுடைய தாய்மாருக்கு சுடுநீர்ப் போத்தல்களையும் முன்பள்ளிகளுக்கு தளபாடங்களும் மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கும் நிகழ்வொன்றை நடத்தினர். இதில் RTr.ரி.கபிலன், RTr.சுரேந்திரன் ஆகியோர் பயனாளிகளுக்கு பொருட்கள் வழங்குவதையும் பயனாளிகளுடன் கழக உறுப்பினர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம் (படங்கள்:- சாவகச்சேரி நிருபர்)

# ஆயிரம் மடங்கு வேகத்தில் இன்டர்நெட்

கணனி இன்டர்நெட் மற்றும் அறிவியல் ஆராய்ச்சிகளுக்கு முதல் இடம் பெற்றுப் பெயர் பெற்றது. அமெரிக்காவில் இயங்கும் எம்.ஐ.டி.கல்வி மற்றும் ஆய்வு நிறுவனம். இங்குள்ள ஆய்வாளர்கள் அண்மையில் தொழில்நுட்பம் ஒன்றை உருவாக்கியுள்ளனர். இதன்மூலம் இன்டர்நெட் செயல்படும் வேகத்தினை 100 முதல் ஆயிரம் மடங்கு வரை அதிகப்படுத்தலாம் என்று தெரிவித்துள்ளனர்.

இதற்கான வழிமுறை இன்டர்நெட் போக்குவரத்தினைக் கையாளும் ரௌட்டர்களில் தான் ஏற்படுத்தப்படும் என்று இந்த ஆய்வை வழிநடத்தும் வின்சென்ட் சான் கூறியுள்ளார். ரௌட்டர்களில் உள்ளே அமையும் மின் அலைகளை அதிவேக ஒப்டி கல் அலைகளாக மாற்றினால் இந்த வேகம் கிடைக்கும் என்று சொல்கிறார். 100 மடங்கு வேகத்தில் செயல்படுகையில் தற்போது 100 எம்.பி.பைல் அனுப்பும் நேரத்தில் 10 ஜி.பி. பைல் ஒன்றை அனுப்ப முடியும்.



கூடுதல் வேகத்தில் இயங்கும் புரோசசர்கள் உருவாகி வருகின்றன. நாம் உருவாக்கும் பைல்களின் முப்பரிமாண காட்சிகள் ஒன்லைனில் விளையாட்டுக்கள் அதிவேக நிதி பரிமாற்றங்கள் என) அளவும் அதிகமாகி வருகிறது. இதனால் பைல்களை அனுப்புவதிலும் பெறுவதிலும் மக்கள் வேகத்தை எதிர்பார்க்கின்றனர். இந்த வளர்ச்சி ஏற்படுகையில் இன்டர்நெட் வேகமாகச் செயல்படவில்லை என்றால் பல இடங்களில் இது முடங்கி நிற்கும் நிலை ஏற்படும்.

எனவே இதற்கான தீர்வினைக் கண்டுபிடிக்க வேண்டும் தீர்வு ஒப்டிகல் பைபர்களில் தான் அடங்கியுள்ளது என்கிறார் இந்த ஆராய்ச்சியாளர். இப்போது இன்டர்நெட் போக்குவரத்தில் ஒப்டிகல் பைபர்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இவை அதிக தொலைவு உள்ள தூரங்களில் கண்டம் விட்டு கண்டம் செல்லும் இடங்களில் கூடப் பயன்படுத்தப்படுகின்றது. இவை எலக்ட்ரிக்கல் சிக்னல்கள் தகவல்களைக் கையாளும் விதத்தைக் காட்டிலும் அதிகத் திறனுடன் கையாள்கின்றன. ஆனால் ஒப்டிகல் சிக்னல்களைக் கையாள்வது சற்று சிக்கலான ஒன்றாகும்.

எடுத்துக்காட்டாக ஒரு ரௌட்டர் தனக்கு வெவ்வேறு திசைகளிலிருந்து ஒப்டிகல் சிக்னல்களைப் பெற்றுக் கையாள்கையில் சிக்கல்களைப் பெறுகிறது. இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு இன்டர்நெட்டில் உள்ள ரௌட்டர்கள் ஒப்டிகல் சிக்னல்களைப் பெற்று அவற்றை எலக்ட்ரிக் சிக்னல்களாக மாற்றுகின்றன. இதன்மூலம் அவற்றைக் கையாளும் நேரம் வரும் வரை அந்த சிக்னல்கள் மெமரியில் பத்திரமாக வைக்கப்படுகின்றன. பின்னர் அனுப்படும் நிலை வருகையில் இந்த எலக்ட்ரிக்கல் சிக்னல்கள் மீண்டும் ஒப்டிகல் சிக்னல்களாக மாற்றி அனுப்பப்படுகின்றன.

இந்த செயல்பாட்டில் நேரமும் திறனும் அதிகம் எடுத்துக் கொள்ளப்படுகிறது. வின்சென்ட்சான் தலைமையில் இயங்கும் ஆராய்ச்சியாளர் குழு இந்த மாறுதலுக்கான தேவையை நீக்கும் தீர்வைக் கண்டறிந்துள் ளது. இந்த விஞ்ஞானிகள் குழு "Flow Switching" என்ற வழி முறையை இதற்கென உருவாக்கி உள்ளனர்.

இதன் மூலம் நெட்வோர்க்குகளுக்கிடையே அதிக அளவில் டேட்டா பரிமாறிக் கொள்ளப்படுகையில், எடுத்துக்காட்டாக யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு சேர்வர் அமெரிக்காவில் உள்ள ஒரு சேர்வருக்குப் பெரிய அளவில் டேட்டாவினை அனுப்புகையில், இதற்கு மட்டும் எனச் சில வழி செயல்முறைகளை அமைத்துக் கொள்கிறது. இந்த வழிமுறைகளில் செயல்படுகையில் ஒரு வழியில் கிடைக்கும் சிக்னல்களை மட்டுமே ரௌட்டர்கள் பெற்று, இன்னொரு குறிப்பிட்ட வழியில் மட்டுமே அனுப்புகிறது. பல்வேறு திசைகளிலிருந்து ஒப்டிகல் சிக்னல்கள் வரும் வாய்ப்பு இல்லை என்பதால், இவற்றை எலக்ட்ரிக்கல் சிக்னல்களாக மாற்றி மெமரியில் வைத்திடும் கட்டாயத் தேவை இங்கு ஏற்படாது.

இதனால் இன்டர்நெட் போக்குவரத்து வேகம் 100 மடங்கு பெருகும். அந்நிலை ஏற்படுகையில் இன்டர்நெட் பயன்பாடு பல திசைகளில் வெகு வேகமாக விரிவடையும். இது மனித வாழ்வில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தும். ஆனால் அதற்கு முன் இந்த ஆராய்ச்சியில் பல நிலைகளை நாம் தாண்ட வேண்டியுள்ளது.

# பேஸ்புக் தளத்தில் 50கோடி பதிவுகள்

பேஸ்புக் தளத்தில் பதிந்துள்ளவர்களின் எண்ணிக்கை விரைவில் 50 கோடியை எட்டப்போகிறது. இது உலக அளவில் இன்டர்நெட் பயன்படுத்துவர்களின் எண்ணிக்கையில் 22% ஆகும்.

இது குறித்து இதனை நிறுவிய மார்க் ஸுக்கர்பெர்க் கூறுகையில்,


எண்ணிக்கை 100 கோடியை எட்டும் நாளும் விரைவிலேயே வரும் என்றார். பேஸ்புக் தளத்தில் பதிவுசெய்து, அதிகம் பயன்படுத்துவோர் பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் இருக்கின்றனர். வியட்நாம் மற்றும் சீனாவில் இது தடை செய்யப்பட்டுள்ளது.


ரஷ்யாவில் இதன் வளர்ச்சிக்கு பெரும் தடை உள்ளது. இந்தியாவில், இந்த தளம் பாடசாலையின் பட்டியல் ஒன்றைத் தேடி அறிய உருவாக்கியுள்ளது. இதன்மூலம் இதில் பதிவு செய்து நண்பர்களைத் தேடி அறிய முடிகிறது.

இந்தியாவிலும் பிரேசில் நாட்டிலும், இந்தத் தளத்திற்குப் போட்டியாக, கூகுள் நிறுவனத்தின் ஆர்குட் அமைந்துள்ளது. ஜப்பானைப் பொறுத்தவரை, அங்கு மொபைல் வழி இன்டர்நெட் பிரவுசிங் அதிகம் என்பதால், பேஸ்புக் அதற்கான தளத்தினை அமைத்து வழங்குவதில் கவனம் செலுத்தி வருகிறது என்றார்.




# தமிழில் இணையத் தேடுதளம்





ஆங்கில இணையத்தளங்களுக்கு, அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக் கழகம், தமிழில் தேடுதளம் ஒன்றினையும், தமிழ் இணையத் தகவல்கோட்டையினையும் உருவாக்கித் தந்துள்ளது. இதனை அண்ணா பல்கலைக்கழகத்தில் இயங்கும் இணைய வெளி ஆராய்ச்சி மையம் உருவாக்கியுள்ளது.இந்தத் தளத்தின் பெயர் "சேர்ச்கோ" (Searchko) இதனை www.searchko.in என்ற முகவரியில் பெறலாம்.

இதுவரை ஆங்கில மொழியில் உள்ளதேடுதல் இணையத்தளங்களையே நம்மில்பெரும்பாலோர் பயன்படுத்தி வருகிறோம். கூகுள் தளத்தில் தமிழ் உட்பட மற்ற மொழிகளிலும் தேடிப் பெறும் வாய்ப்பு தரப்பட்டுள்ளது. இப்போது தமிழுக்கு முக்கியத்தும் கொடுத்து, தமிழில் ஒரு தேடல் தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலஎழுத்துக்களைப் பயன் படுத்தி, ஒலியியல் அமைப்பில் கீகளை அழுத்தி, தேடலுக்கான சொற்களை உருவாக்கித் தேடலாம். அல்லது இதில் தரப்பட்டுள்ள விசைப்பலகையை கிளிக் செய்து, அதன் மூலம் சொற்களை டைப் செய்தும் தேடலாம். (கீ போர்ட் வழக்கமான கீபோர்ட்டாக இல்லாமல் சற்று மாற்றாக உள்ளது. பழகிவிட்டால் சரியாகவிடும்)

தேடல், மருத்துவம், இலக்கியம் எனப் பெரிய பிரிவுகள் தரப்பட்டுள்ளன. இவற்றில் தேவையானதைத் தேர்ந்தெடுத்து நாம் தேடும் தகவல்களைப் பெறலாம்.

இந்த தளத்தேடலில், இயற்கை மொழி ஆய்வில் பயன்படுத்தப்படும் பல தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. இணைய வெளியில் ஏறத்தாழ ஒரு கோடி தமிழ் ஆவணங்கள் உள்ளன. இவற்றை ஒருமுகப்படுத்தி , தேடலுக்கு உட்படுத்தி, தேடல் தேவைகளை நிறைவேற்றுவதே இந்தத் தளத்தின் நோக்கம் என இதில் ஈடுபட்டுள்ள ஆய்வாளர்களில் ஒருவரான டாக்டாப் ஷோபா கூறினார்.

ஆங்கிலம் தமிழ் மற்றும் தமிழ் ஆங்கிலம் அகராதிகள் தரப்பட்டுள்ளன. இந்த அகராதிகளில் ஏறத்தாழ 1.5 இலட்சம் வேர்ச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்திச் சொற்களுக்குப் பொருள் தேடிப் பெறலாம்.


இலக்கியப் பிரிவில் தமிழ் இலக்கியங்கள் உள்ள தளங்களின் பட்டியலைப் பெற்று அவற்றைப் பயன்படுத்தலாம். இந்த தேடுதல் தளம் இன்னும் சோதனைப் பதிப்பு நிலையில் தான் உள்ளது. பிழை திருத்தி போன்றவை விரைவில் சரி செய்யப்பட்டு மேம்படுத்தப்படும் என எதிர்பார்க்கலாம்.

சரி அது என்ன சேர்ச்கோ என்ற ஐயம் உங்களுக்கு வரலாம். இங்கு 'கோ' என்பது தமிழ்ச் சொல். அரசன் என்ற பொருளைத் தரும். தேடல் சாதனங்களில் இது ஒரு அரசனாக இயங்கும் என்று பொருள் தரும் வகையில் பெயரிடப்பட்டுள்ளது. தமிழில் கொண்டு வந்துள்ள இந்த முயற்சியை வரவேற்போம்.

# கணனி பயன்பாட்டிற்கான விளக்கக் குறிப்புக்கள்

சிறுவயதிலிருந்து நாம் எதனையாவது கற்றுக்கொள்கிறோம் என்றால் படம் பார்த்து விளக்கம் பெற்றுத்தான் அதனை மனதில் இருத்திக்கொள்வோம். கணனிப் பயன்பாட்டில் கற்றுக்கொள்ள எத்தனையோ இருக்கின்றன. அத்தனையும் ஒருவர் தன் வாழ்நாளில் கற்றுக்கொள்ளமுடமியாது. எனவே அவரவருக்கு எந்தப் பிரிவில் உதவி தேவைப்படுகிறதோ அதனை மட்டும் தேடிப் பிடித்துக் கற்றுக்கொள்கிறோம்.

இணையத்தளம் ஒன்றைத் தயாரிக்கிறீர்கள். டிஜிட்டல் போட்டோ எடுத்து அவற்றை கணனியில் இணைக்க முயற்சிக்கிறீர்கள். எடுத்த போட் டோக்களை எடிட் செய்திட விரும்புகிறீர்கள். இதற்கெல்லாம் உதவிக் குறிப்புகளை நாடுகிறீகளா? அப்படியானால் உங்களுக் கென உள்ள இந்தத் தளம் குறித்து நீங்கள் கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டும். இத்தகைய உதவியினை வளமாக நல்ல டுட்டோரியல் பாடங்களாகப் பதிந்து வைத்து இந்த இணையத் தளம் தருகிறது. இதன் முகவரி http://www.qoodtutorials.com/ இந்த செய்தியை எழுதும் போது இந்தத் தளத்தில் 25, 049 டுடோரியல்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.




13 பிரிவுகளாக இந்த வழிகாட்டும் தளங்கள் உள்ளன. அவை CSS,Flash, HTML, Illustrator, Java, JavaScript, Maya, photography, Photoshop, PHP, Ruby, Ruby on Rails and 3ds Max எனப் பிரிக்கப்படடுள்ளன. முதல் பக்கத் தில் புதியதாக பதியப்பட்ட 15 உதவித்தளங்களின் பட்டியல் காணப்படுகின்றது. நான் பார்த்தபோது போட்டோஷொப்பிற்கான இன்டர்பேஸ் குறித்த டுடோரியல் காணப்பட்டது.இதனைத் திறந்து பார்க்கையில் போட்டோஷொப் குறித்து பல செய்திகள் கிடைத்தன. இந்த உதவிக் கட்டுரைகளின் கீழாக மேலும் பல உதவி தரும் தளங்களுக் கான லிங்க் குகள் உள்ளன. அவற்றையும் கிளிக் செய்து படித்துத் தெரி ந்து கொள்ள லாம்.

இதன் கீழ் சில பிரிவுகளும் உண்டு. அவை Rating, Clicks , Comments, Save, Share and Report இந்தத் தகவல்கள் குறித்த உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்கலாம். எந்தக் கட்டுரையை சேவ் செய்திட வேண்டுமென்றால் சேவ் டேபைத் தேர்ந்தெடுத்து சேவ் செய்திடலாம். அப்போது இன்னொரு லிங்க் தரப்பட்டு அங்கு சேவ் செய்யப்படும்.

உங்கள் எக்கவுண்டில் இந்தக் கட்டுரைகள் சேவ் செய்யப்பட்டு இருக்கும். உங்கள் எக்கவுண்டை ஏற்படுத்த இந்த தளத்தில் பதிவுசெய்வதும் எளிது.

நிச்சியமாய் இது உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கும் என்பதால் இன்றே இந்தத் தளம் சென்று பதிந்துகொள்ளுங்கள். குறைந்த பட்சம் உங்கள் பேவரிட் தளப் பட்டியலில் இணைத்துக் கொள்ளுங்கள்.

# இலங்கைக்கு அனைத்துக் கட்சி குழுவை அனுப்ப வேண்டும்

## சீதாராம் யெச்சூரி வலியுறுத்தல்



இலங்கைக்கு அனைத்துக் கட்சிக் குழுவை அனுப்ப வேண்டும் என்று இந்திய மார்க் ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர் சீதாராம் யெச்சூரி வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, பிரதமர் மன்மோகன் சிங், தமிழக முதலமைச்சர் கருணாநிதிக்கு எழுதிய கடிதத்தில், இலங்கையில் தமிழர் பகுதிகளின் நிலவரங்களை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்வதற்காக,வெளியுறவு துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவரை சிறப்புத் தூதராக அனுப்பிவைக்க மத்திய அரசு முடிவு செய் துள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் பாராளுமன்ற கூட்டம், விலைவாசி உயர்வு பிரச்சினையால் ஏற்பட்ட அமளியால் நாள் முழுவதும் முடக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் மூத்த தலைவரான சீதாராம் யெச்சூரி செய்தியாளர்களை சந்தித்துப் பேசிய போது,

இலங்கையில் முகாம்களில் உள்ள தமிழர்களின் நிலையை பார்வையிடு வதற்காக அனைத்துக் கட்சி தலைவர்கள் அடங்கிய குழு ஒன்றை இலங்கைக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

இலங்கை தமிழர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு அளிக்க நடவடிக்கை எடுக்கவும், இலங்கை அரசின் அரசியல் அமைப்புக்கு உட்பட்டு தமிழர் பிராந்தியங்களுக்கு முழு சுயாட்சி உரிமை வழங்கவும் இலங்கை அரசை மத்திய அரசு வற்புறுத்த வேண்டும் என்று மத்திய அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார். (6)

## இமாச்சல பிரதேச பஸ்விபத்தில் 30 பேர் பலி; 20 பேர் காயம்

இமாச்சல பிரதேசம் மாநிலம் குப்வியில் உள்ள மலைப் பாதையில் சென்ற மாநில அரச பஸ்ஸில் 50க்கும் மேற்பட்ட பயணிகள் இருந்தனர்.

இந்தப் பகுதியில் சமீபகாலமாக பெய்த மழை காரணமாக பல இடங்களில் நிலச்சரிவு ஏற்பட்டு இருந்தது.

மழையால் பாதிப்பு ஏற்பட்டு இருந்த பாதையில் பஸ் வந்த போது கட்டுப்பாட்டை இழந்து மலையில் இருந்து உருண்டு பள்ளத்தில் விழுந்தது. இந்த விபத்தில் பஸ்ஸில் இருந்த 30 பயணிகள் உயிரிழந்தனர். 20 க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். (6)

# இலங்கை செல்லும் நடிகர்களின் படங்களை புறக்கணிக்க உலகத்தமிழ் அமைப்பு முடிவு

அமெரிக்காவில் செயல்பட்டு வரும் உலகத் தமிழ் அமைப்பின் தலைவர் நாஞ்சில் பீட்டர் வடஅமெரிக்க தமிழ் சங்க பேரவை தலைவர் பழனிசுந்தரம் ஆகியோர் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில்,

தமிழீழத்தில் நமது தொப்புள் கொடி உறவான தமிழ் இனத்தை சிங்கள அரசு பூண்டோடு ஒழித்து வருகிறது. தமிழ் இனப் படு கொலையில் ஈடுபட்ட அனைவரையும் உலக நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனை வழங்கப்படும் நாள் தொலைவில் இல்லை.

இலங்கைக்கு நடிகர்கள் யாரும் போகக் கூடாது என்று தீர்மானம் போட்டுள்ள நடிகர் சங்கத்துக்கு உலகத் தமிழ் இனம் நன்றி தெரிவிக்கிறது. தமிழர்கள் உணர்வுகளை துச்சமென நினைத்து இலங்கை சென்ற மலையாள நடிகை அசின் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என உலக தமிழ் அமைப்பு நடிகர் சங்கத்தை வலியுறுத்துகிறது.

இதேவேளை அசின் நடித்த அனைத்து திரைப்படங்களையும் புறக்கணிக்க உலகத் தமிழர்கள் முடிவெடுத்துள்ளனர். அந்த முடிவை அமெரிக்கா, கனடா நாட்டில் நிறைவேற்றுவோம்.

தமிழ் உணர்வுடன் செயல்பட்டு வரும் ராதாரவி சத்யராஜ் ஆகியோரையும் தமிழர்களின் உரிமைகளுக்கு ஆதரவும் நல்கும். நடிகர் சங்கத்தின் மற்ற உறுப்பினர்களையும் பாராட்டுகிறோம். தமிழர்களுக்காக உழைக்கும் திரைத் துறை யினர் யார் எதிராக உள்ளவர்கள் யார் என் பதை ஆராய்வதுடன் யாருடைய படங்களை புறக்கணிப்பது என்பது பற்றி ஆலோசித்து வருகிறோம்.

தமிழ் நாட்டில் இருந்து வரும் திரைப் படங்களின் கணிசமான வருவாய் எங்களைப் போன்ற புலம் பெயர்ந்த தமிழர்களின் ஆதரவால் ஈட்டப்படுகிறது. கடந்த காலத்தில் ஈழத் தமிழருக்கு ஆதரவாக திரைத்துறையினர் நடத்திய போராட்டங்களை அலட்சியப்படுத்திய நடிகர்களின் படங்கள் புலம் பெயர் தமிழர்களால் புறக்கணிக்கப்பட்டன. இதன் விளைவாக அத்திரைப்படங்கள் படுதோல்வியை தழுவின.

இதுபோல் தொடர்ந்து தமிழர் உரிமை குரலுக்கு எதிராக செயல்படுவோர் படங்களை புறக்கணித்து போராட்டங்களை மேற்கொள்வோம் என்று தெரிவித்துள்ளார்கள். (6)




# பச்சை வேட்டைக்கு எதிராக தாக்குதல் நடத்த மாவோயிஸ்ட்டுகள் சதித்திட்டம்

## மத்திய அரசு மீண்டும் எச்சரிக்கை

(டில்லி)

மத்திய அரசின் பச்சை வேட்டை நடவடிக்கையால் முக்கிய தளபதிகளை இழந்ததற்கு மாவோயிஸ்ட்கள் பழிவாங்க சதித்திட்டம் தீட்டியிருப்பதாக மத்திய அரசு மீண்டும் எச்சரித்துள்ளது.

பீகார், ஒரிசா,மேற்குவங்கம் உள்ளிட்ட 6 வடமாநிலங்களில் மாவோயிஸ்ட்களை ஒடுக்குவதற்காக மத்திய மற்றும் மாநில அரசுகள் இணைந்து பச்சை வேட்டை என்னும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன. இந்த அதிரடித் தாக்குதலில் பல்வேறு மாவோயிஸ்ட்களின் முக்கிய தளபதிகள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும் இதன் காரணமாக அவர்களால் தீவிரமாக இயங்க முடியாத நிலையும் ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் நேற்று முதல் அடுத்த மாதம் 3 ஆம் திகதி வரை மறைந்த தளபதிகளின் நினைவு வாரத்தை மாவோயிஸ்ட்கள் அனுசரித்து வருகின்றனர்.

இதன்போது பச்சை வேட்டை க்கு எதிராக அவர்கள் பயங்கர தாக்குதல் நடத்த சதித்திட்டம் தீட்டியிருப்பதாக மத்திய அரசு எச்சரித்துள்ளது. இதனையடுத்து ரயில்வே நிலையம் பள்ளிக்கூடம் உள்ளிட்ட அம் மாநிலத்தின் அனைத்து முக்கிய இடங்களிலும் பாதுகாப்புகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. (6)

# 10 வயதில் கணனி பொறியியலாளர்; மதுரையைச் சேர்ந்த சிறுமி சாதனை

(மதுரை)

பத்து வயதில் ''ரெட் ஹாட் இன்ஜினியரிங் சான்றிதழ் - லைனக்ஸ் 5'' பரீட்சையில் சித்தியடைந்த மதுரை சிறுமி சாதனை படைத்துள்ளார்.

மதுரையைச் சேர்ந்த முனியசாமி இந்துலேகா தம்பதியினரின் இரண்டாவது மகள் லவிநாஸ்ரீ தற்போது 10 வயதாகும் லவிநாஸ்ரீ டி.வி.எஸ் லட்சுமி பள்ளியில் படிக்கிறார். ஏற்கனவே 8 ஆவது வயதில் ''மைக்ரோ சொப்ட்'' சான்றிதழ் பரீட்சையில் 9 ஆவது வயதில் மைக்ரோசொப்ட் விண்டோஸ் சர்வர் பரீட்சையிலும் சித்தியடைந்து சாதனை படைத்தார். இப்போது மிக கடினமான ''ரெட்ஹாட் இன்ஜினி யரிங் சான்றிதழ்'' ஒன் லைன் பரீட்சையில் சித்தி பெற்று சாதனை படைத்துள்ளார்.



இவ்வளவு குறைந்த வயதில் உலகில் இப் பரீட்சையில் சித்தியடைவது இவர் தான் என குறிப்பிடப்படுகிறது. 6)

# ஐ.நா. நிபுணர் குழுவுக்கு நாம் தமிழர் இயக்கம் பாராட்டு

நாம் தமிழர் கட்சி திருச்சி மாவட்ட கலந்தாய்வுக்கூட்டம் திருச்சி அய்க்கப் அரங்கத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பிரபு தலைமை தாங்கினார்.

இதில் நாம் கட்சியைச் சேர்ந்த நூற்றுக் கணக்கானோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில், "நாம் தமிழர் கட்சி மாநில ஒருங்கிணைப்பாளர் சீமானை உடனடியாக விடுதலை செய்யவேண்டும்.

திருச்சி மாவட்டத்தில் உரிமைகளுக்காக ஆர்ப்பாட்டம் மற்றும் பொதுக்கூட்டம் நடத்த அனுமதி மறுத்துவரும் பொலிஸாரின் போக்கினை கண்டிப்பது, விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்தாத மத்திய - மாநில அரசுகளைக் கண்டிப்பதும் கடந்த ஆண்டு இலங்கையில் நடந்த தமிழினப் படுகொலை குறித்த உண்மைகளைக் கண்டறிய மூவர் குழுவை நியமித்தமைக்காக ஐ.நா.சபைக்கு நன்றி தெரிவிப்பது'' என்பது உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (6-2)



கடந்த 50 ஆண்டுகளாக யோகா செய்து 80 வயதிலும் இளமையோடு வலம் வரும் கிருஷ்ணகிரியை சேர்ந்த பல்ராம் சிங் ஏகபாத ஆசனத்தில் உள்ளார்.

# இலங்கை செல்லமாட்டேன்; நடிகை திரிஷா தெரிவிப்பு

கமலஹாசனுடன் முதன்முதலாக திரிஷா ஜோடியாக நடிக்கும் படம், மன்மதன் அம்பு. இப்படத்தின் படப்பிடிப்பு இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின் ஆகிய நாடுகளில் 50 நாட்களுக்கும் மேல் நடந்தது.

படப்பிடிப்பை முடித் துக்கொண்டு சென்னை திரும்பிய திரிஷா, செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது, அசின் ஒரு இந்தி படப்பிடிப்புக்காக இலங்கை சென்று வந்தது. பிரச்சினை ஆகியிருக்கிறது. நீங்களும் இந்திப் படத்தில் நடிக்கிறீர்கள். இலங்கையில் படப்பிடிப்பு வைத்தால் கலந்துகொள்வீர்களா? என்று கேட்டதற்கு, நான் தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்த பெண் இங்கே உள்ள நடிகர் சங்கம் இலங்கைக்கு போகக் கூடாது என்றால், அது இந்திப் படமாக இருந்தாலும் சரி, வேறு எந்த மொழி படமாக இருந்தாலும் சரி, போக மாட்டேன் .



அந்த மாதிரி ஒரு சூழ்நிலை எனக்கு இதுவரை வரவில்லை.வரும்போது பார்க்கலாம் என்று தெரிவித்தார். (6)



பொலிஸ் தின நிகழ்வு நேற்று யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலகத்தில் இடம்பெற்றது.இந்நிகழ்வில் வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் காமினி டி சில்வா பெண் ஒருவரின் முறைப்பாட்டை ஏற்றுக்கொள்வதையும் மற்றும் யாழ்ப்பாண சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுடன் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பாக கலந்துரை யாடுவதையும் பொலிஸ் தின நிகழ்வில் கலந்துகொண்ட மக்களையும் படங்களில் காணலாம்.

# ஆசிரியர்களுக்கான இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

(அல்வாய்)

வடமாகாண கல்விப் பணிப்பாளரின் கடிதத்திற்கமைய, ஆசிரியர்களுக்கான இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2011 ஆம் ஆண்டு தை மாதம் முதலாம் திகதி முதல் இடமாற்றங்கள் நடைமுறைப் படுத்த உத்தேசிக்கப் பட்டுள்ளது. இதற்கமைவாக; வலயத்திற்குட்பட்ட இடமாற்றம், மாவட்டங்களுக்கு இடையிலான இடமாற்றம், மாகாணங்களுக்கு இடையிலான இடமாற்றம் ஆகியவை நடைபெறவுள்ளது.

மேற்குறித்த சகல நிலைகளுக்குமான இடமாற்ற விண்ணப்பங்களை வலயக் கல்வி அலுவலகத்திற்கு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக ஒவ்வொருவரும் தத்தம் வலயத்திலுள்ள வலயக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

இடமாற்றம் பெறத் தகுதியானவர்:-

- வலயத்தில் தொடர்ச்சியாக ஒரே பாடசாலையில் ஆறு வருடத்திற்கு மேல் கடமை புரிந்திருந்தால், அதே வலயத்தில் வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் பெறுவதற்கும், வேறு பாடசாலையில் ஆறு வருடத்திற்கு மேல் கடமையாற்றிய ஒருவர் குறித்த பாடசாலைக்கு இடமாற்றம் கோரும் பட்சத்தில் இடமாற்றம் செய்யப்படுவதற்கும் உரித்துடையவர்களாவர்.
- கஷ்ட பிரதேசத்தில் நான்கு ஆண்டுகள் தொடர்ச்சியாக சேவையாற்றிய ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும்.
- வசதியான பிரதேசத்தில் ஆறு வருடங்கள் தொடர்ச்சியாக சேவையாற்றி இருப்பின் ஆசிரியர்கள் இடமாற்றத்திற்கு தகுதி உடையவர்கள் எனக் கருதப்படுவார்கள்.
- விசேட வைத்திய காரணங்களுக்காக இடமாற்றம் கோருவோர் (அரச வைத்திய அதிகாரியினரின் சான்றிதழ் இணைக் கப்பட்டிருத்தல் வேண்டும்) தகுந்த காரணம் சமர்ப்பிக்க வேண்டும்.
- வடக்கு மாகாணத்தில் பாதுகாப்புப் படையில் கடமையாற்றும் மனைவி அல்லது கணவன் இருந்தால், இவர்இடமாற்றம் பெறத் தகுதியுடையவராகக் கருதப்படுவர்.
- கணவன், மனைவி ஒன்றாக இணைந்து வாழ வேண்டிய அத்தியாவசிய தேவையேற்படின் அத்தகையோரது இடமாற்றக் கோரிக்கை தொடர்பில் விண்ணப்பதாரி குறித்த வலயத்தில் குறைந்தது நான்கு வருட சேவையைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

மேலும் விண்ணப்பிப்பவரின் கணவன் அல்லது மனைவி அரச நிறுவனம் ஒன்றில் கடமை புரிபவராயின், அது தொடர்பான திணைக்களத் தலைவரின் கடிதமும் தனியார் நிறுவனமாயின் அவ் நிறுவனத் தலைவரின் கடிதத்துடன் வதிவிடத்தை உறுதிப்படுத்தும் சான்றிதழும், சுயதொழில் புரிபவராயின், கிராம சேவை உத்தியோகத்தரால் உறுதிப்படுத்தப்பட்ட வதிவிடச் சான்றிதழும் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

- கர்ப்பிணித்தாயினால் இடமாற்றம் கோரப்படுமிடத்து, அவரது வைத்திய அறிக்கையில் குறிப்பிட்ட அம்சங்கள் அடிப்படையாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

சகல இடமாற்ற விண்ணப்பத்துடனும் முதல் நியமனக் கடிதத்தின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியும், இடமாற்றத்தினை சான்றுபடுத்தக் கூடிய ஆவணங்களும் இணைக்கப்படுதல் வேண்டும்.

சகல இடமாற்ற விண்ணப்பங்களும் அதிபர் ஊடாக செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் அவரவர் வலயக் கல்வி அலுவலக நிர்வாகக் கிளையில் ஒப்படைக்கப்படல் வேண்டும். குறித்த திகதியின் பின் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது.

தற்காலிக இணைப்பில் உள்ள வெளி மாவட்ட ஆசிரியர்கள் தங்களது இடமாற்ற விண்ணப்பங்களைத் தமது நிரந்தர வலயத்தினூடாகவே குறித்த ஆவணங்களுடன் அனுப்புதல் வேண்டும் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா அறிவித்துள்ளார். (2-19)

# நிர்வாக சபை கூட்டம்

(அல்வாய்)

அகில இலங்கை காந்தி சேவா சங்க நிர்வாக சபைக் கூட்டம் நிர்வாக சபைக் கூட்டம் சங்கப் பணிமனையில், நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு சங்கத் தலைவர் ஆ.வடிவேலு தலைமையில் நடைபெறவுள்ளது. (2-19)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மிகவும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஊர்காவற்றுறை சுகாதார பணிமனையின் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளில் திங்கள், வெள்ளிக் கிழமைகளில் அரை மணித்தியாலயம் சிரமதானப்பணிகள் நடைபெறுவதாகவும் டெங்கு கட்டுப்பாடு தொடர்பாக ஏனைய பிரதேசங்களை விட தீவகப் பிரதேசத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டும் என ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் குழுத் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சில்வேஸ்திரி அலன்ரினிடம் கேட்டுக்கொண்டதாகவும் அவர் தெரிவித்தார். (6-4)

# லெபனானிலுள்ள 450 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் நாடு திரும்பவுள்ளனர்

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் லெபனானில் தங்கியுள்ள 450 இற்கும் மேற்பட்ட இலங்கையர்கள் மீண்டும் நாட்டிற்கு திரும்புவதற்கு அந் நாட்டிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் பதிவுசெய்து கொண்டுள்ளனர்.

கடந்த திங்கள் மற்றும் செவ்வாய்க் கிழமைகளில் இந்த பதிவு நடவடிக்கைகள் இடம்பெற்றன.

சட்டவிரோதமாக லெபனானில் தங்கியுள்ள இலங்கையர்கள் நாட்டிற்கு திரும்புவதற்கு வழங்கப்பட்டுள்ள மூன்று மாத கால பொது மன்னிப்பை பயன்படுத்தி மீண்டும் நாட்டிற்கு திரும்ப முன்வந்துள்ளதாக லெபனானிலுள்ள இலங்கைத் தூதுவர் தெரிவித்துள்ளார். (6-4)

# சர்வதேச வலைப்பந்தாட்டப் போட்டிகளில் பங்கு பற்றும் யூனியன் கல்லூரி

(யாழ்ப்பாணம்)

சர்வதேச வலைப்பந்தாட்ட சங்கத்தினரால் நடத்தப்படும் வலைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டிகள் ''மலேசிய பல்கலைக்கழக பான் செயின்'' ஏற்பாட்டாளர்களால் எதிர்வரும் 31, 1 ஆம் திகதிகளில் மலேசியாவில் உள்ள 'பினாங்' மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் 145 அணிகள் பங்குபற்றுவதோடு வடக்கு, கிழக்கு மாகாணத்தில் இருந்து யாழ்.யூனியன் கல்லூரி அணியிலிருந்து இரண்டு ஆசிரியர்களும் 7 அணி வீரர்களும் நேற்று யாழ்ப்பாணத்தில் இருந்து புறப்பட்டு மலேசியா சென்றுள்ளனர்.

மேற்குறித்த திகதிகளில் மேற்படி போட்டிகளில் இவர்கள் கலந்து கொள்வார்கள். வடக்கு, கிழக்கில் இருந்து பங்குபற்றுகின்ற ஒரேயொரு அணி இது என்பதுடன் இவ் வணியை திருமதி ஜெயந்தி ஜெயதரன் பயிற்றுவித்துள்ளார்.

அத்துடன் மாகாணமட்டப் போட்டிகளில் முதல் இடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டியில் மூன்றாவதுதடவையாக தெரிவாகியுள்ள அணி என்பதும் குறிப்பிடத்தக்கது. (6-2)



யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற யாழ். மாவட்ட விளையாட்டுப் போட்டி நிகழ்வின் போது இடம்பெற்ற யாழ் மாவட்ட கராத்தே சங்கத்தினரின் கராத்தே நிகழ்வைப் படத்தில் காணலாம். (படங்கள்:- என்.குமார்)

ஓடப்பாந்தவர்களை தைரியசாலிகள் என்று எண்ணியதும் உண்டு. -இங்கிலாந்து

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## முத்துக்குமாரன் தீயில் வெந்தான் சீமான் சிறையில் வாடுகிறான் நாங்களோ பதவிக்காக...

இலங்கைத் தமிழ் மக்களின் எதிர்காலம் எப்படி அமையும் என்று தவத்திரு யோகர்சுவாமிகளிடம் சிலர் கேள்வி எழுப்பினர்.

அதற்கு யோகர் சுவாமிகள் எந்தவித பதிலையும் தரவில்லை.

மாறாக, குலுங்கிக் குலுங்கி அழுதாராம். அவரின் அழுகைக்கான காரணம் என்ன என்பதை இப்போது தமிழ் மக்கள் உணர்ந்துள்ளனர்.

எத்தனை துன்ப துயரங்கள். இதற்கு மேலாக எல்லாவற்றையும் இழந்து போன பரிதாபங்கள்.

இது தமிழரின் நிலையாக இருக்கும்போது தமிழ் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் எங்கள் எதிர்காலமும் ஆரோக்கியமானதாக அமையாதென்பதை உறுதிப்படுத்துவதாகவுள்ளது.

தமிழர்களுக்காக பாடுபட்டவர்களை துரோகிகளாகக் காட்டி அவர்களை வெளியேற்றி விட்டு அந்த இடத்தை தாங்கள் கைப்பற்றி தமிழ் இனத்தை படுபாதாளத்தில் வீழ்த்துவதற்கு கெடுசுவட்டமொன்று புறப்பட்டு விட்டது.

இதற்காக சில குழப்பசக்திகள் பிரசாரம் செய்யவும் தலைப்பட்டுள்ளன.

இதிலிருந்து தமிழ் மக்கள் தங்களைப் பாதுகாப்பதாக இருந்தால் முதலில் உண்மையை கண்டறிய வேண்டும்.

அன்புக்குரிய தமிழ் மக்களே! தமிழகத்தில் சீமான் சிறையில் வாடுகின்றான். இலங்கையில் நடந்த 'ஐபா' இந்தியத்திரைப்பட விழாவுக்கு வந்து போன நடிகர் நடிகைகளின் திரைப்படங்களுக்கு வெளிநாடுகளில் தடை விதிக்கும் தண்டனையை உலகத் தமிழ் மக்கள் வழங்கி வருகின்றனர்.

ஆனால் நாம் என்ன செய்கிறோம். நடக்கப் போகும் வடக்கு மாகாணசபைத் தேர்தலுக்கு நவதானியம் விதைக்கப் புறப்பட்டுவிட்டோம். எப்படி இருக்கிறது எங்கள் மனநிலை!

ஈழத்தமிழர்களுக்காக எதையும் செய்வேன் எனச் சீமான் முழங்க, தமிழினத்தை அழிப்பதை என்னால் பொறுத்துக்கொள்ள முடியாதென சகோதரன் முத்துக்குமாரன் தனக்குத்தானே தீ மூட்டி எரிக்க, இங்குள்ள தமிழ் அரசியல்வாதிகளோ தங்கள் சொந்த நலனைக் கவனிப்பதில் மட்டும் கண்ணும் கருத்துமாக இருக்கின்றனர்.

என்ன செய்வது! தமிழ் மக்கள் நிதானமாகச் செயற்படாதவரை இந்தத் துயரம் தொடரவே போகிறது.

# இந்தியாவுக்குள் தடையின்றி இலங்கை கடற்படையினர் பிரவேசம்

## தமிழக மீனவர்கள் குற்றச்சாட்டு

(சென்னை)

தமிழ்நாடு, இராமேஸ்வரம், தனுஷ்கோடிக்கு பகல் நேரத்திலேயே தடையின்றி படகில் பிரவேசிக்கும் இலங்கை கடற்படையினர் குறித்து புலனாய்வுத் துறையினர் விசாரித்து வருகின்றனர்.

தனுஷ்கோடிக்கும் இலங்கை தலைமன்னாருக்கும் இடைப்பட்ட கடற்பகுதியில் மீன்பிடித் தொழில் செய்யும் இலங்கை மீனவர்கள் படகில் தனுஷ்கோடி வந்து இங்குள்ள கடைகளில் தேவையான பொருட்களை வாங்கிச்செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக தமிழக மீனவர்களும் இது வரை முறைப்பாடு செய்யவில்லை. இலங்கை மீனவர்களால் பிரச்சினை எதுவும் ஏற்படாத நிலையில் புலனாய்வுத் துறையினரும் இதனை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

தடையேதும் இல்லாததால் இலங்கை மீனவர்கள் தனுஷ்கோடிக்கு வந்து செல்வதும் தொடருகிறது. இந்த நிலையில் சமீப காலமாக இலங்கை கடற்படையினரும் படகில் தனுஷ்கோடிவருவது வழக்கமாகிவிட்டது.

சிலநாட்களுக்குமுன் இலங்கை கடற்படை வீரர்கள் சிலர் றோந்து செல்லும் கேஸ்போட் மூலம் தனுஷ் கோடி வந்துள்ளனர்.

இந்திய கடல் எல்லை அமைந்துள்ள ஐந்தாம் மணல் திட்டு வரை வந்த இலங்கை கடற்படையினர் தனுஷ்கோடி கடற்கரையில் தரையிறங்கி இங்குள்ள சிறு கடைகளில் தங்களுக்குத் தேவையான பிஸ்கெட், சிகரெட், பீடி, குளிர்பானங்களை வாங்கிக்கொண்டு இலங்கை மற்றும் இந்திய பணத்தைக் கொடுத்துச் சென்றுள்ளனர்.

இலங்கை கடற்படையினர் வந்தது குறித்து ஆரம்பத்தில் கவனம் செலுத்தாத மீனவர்கள் கடற்படையினரின் வருகைத் தொடர்ந்ததால் இவர்களின் ஊடுருவல் குறித்து தகவல் கொடுத்தனர்.

இந்த நிலையில் இராமேஸ்வரம் கடற்பகுதியில் இந்திய கடற்படையினரின் கண்காணிப்பை மீறி பகல் நேரத்திலேயே இந்திய கடல் எல்லை தாண்டி எதற்காக அடிக்கடி தனுஷ்கோடிக்கு வந்து செல்கின்றனர் என்பது குறித்து மத்திய மாநில புலனாய்வுத்துறை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். (ச-5)

## யோகாசன தியான வகுப்புக்கள் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

சிவானந்த மகரிஷி யோக நிலையத்தினரால் எதிர்வரும் முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் புதிய யோகாசன தியான வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன. இப்பயிற்சி வகுப்புக்கள் வெள்ளி, சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

இப் பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ள விரும்புவோர் வேதாந்தமடம் குமாரசாமி வீதி கந்தர்மடம் என்னும் முகவரிக்குச் சென்று தியான மண்டபத்தில் ஆரம்பமாகும் தினத்திற்கு முன்னதாக உங்கள் பெயர் விபரப் பதிவுகளை மேற்கொண்டு பயிற்சிகளில் ஈடுபட்டுக் கொள்ளலாம்.

உடல் நிலைக்கு ஏற்ற விதத்தில் பயிற்சிகள் தொகுத்து வழங்கப்பட்டு நோயாளிகள் இருந்தால் நோயாளியின் நோயும் குணப்படுத்தப்படும். இப் பயிற்சி வகுப்பில் ஆண்கள், பெண்கள், சிறியோர், பெரியோர் என்ற எவ்வித வயது வேறுபாடுகளுமின்றி அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம். (ச)

## கருத்துப்பகிர்வும் நூல் வெளியீடும்

(யாழ்ப்பாணம்)

பேசுபொருளாக இனப்பெருக்க சுகாதாரம் கருத்துப்பகிர்வும் நூல் வெளியீடும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தியாகிஅறகொடை நிறுவன சொர்ணாம்பிகை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வினை யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன் இணைந்து சாந்திகம் உளவளத்துணை நிலையம் மேற்கொண்டுள்ளது. (ச)

## கழிவுத் தகரங்கள், இரும்புக் கழிவுகளை கல்லுண்டாய்வெளிக்கு அப்புறப்படுத்தவும்

### யாழ்.மாநகரசபை கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குள் குறிப்பாக நகரையண்டிய பகுதிகளில் பாவனைக் குதவாத கழிவுத் தகரங்கள் மற்றும் இரும்புப் பொருட்கள் வீதியோரங்களிலும் தனியார் காணிகளினுள்ளும் குவித்து வைக்கப்பட்டிருப்பதனால் வாகனப் போக்குவரத்துக்கு இடையூறாகவும் நுளம்புப் பெருக்கத்திற்கு சாதகமாக அமைந்திருப்பது அவதானிக்கப் பட்டுள்ளதாகவும் வடமாகாண ஆளுநரின் தலைமையில் இடம்பெற்ற மாவட்ட டெங்குக் கட்டுப்பாட்டு கண்காணிப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கமைவாக மேற்படி பொருட்களை ஒருவார காலத்திற்குள் கல்லுண்டாய் வெளி பிரதேசத்திற்கு அப்புறப்படுத்துமாறு யாழ் மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா கேட்டுக் கொள்கின்றார்.

தவறுமிடத்து 2007 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நுளம்பு உற்பத்தடுப்புச் சட்டத்தின் கீழ் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது தவிர்க்க முடியாமல் போகுமென்பதையும் உறுதியாகத் தெரிவித்துக் கொள்வதாக அவர் அறிவித்துள்ளார். (6-2)

# கருணை நிறைந்தவர் பாபா

பிறப்பினில் கைகளும் கால்களும் இல்லாமல் தனது பிறவியைத் தொடர்ந்த வட அமெரிக்காவைச் சேர்ந்த (பெயர் சரியாக அறியப்படவில்லை) ஒருவர் தனது பிறப்பின் பயனை இட்டு மனம் மிகவருந்தியவராய் வாழ்ந்து வந்தார். இரண்டு கைகளும், இரண்டு கால்களும் ஆறு அங்குலங்களுக்கு மேற்படவில்லை. அவ்வங்கங்களுக்கு காணப்படவில்லை. இப்படி பெற்றவர்களுக்கு பாரமாகவும் பொறுப்பாகவும் இருந்து வருவதையிட்டு மிகவும் மனம் வருந்தினார்.

ஒருநாள் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் அடியார் ஒருவர் இவரின் வீட்டுக்கு சென்ற வேளை இவரைப் பார்த்து மன வேதனைபபட்டவராய் "நீங்கள் புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்திற்கு சென்று எல்லாம் வல்ல சாயி நாதனிடம் உங்கள் நிலையினைக் காட்டி அவரிடம் மன்றாடுங்கள் ஏதோ ஒரு வகையில் உங்கள் மீதுதன் கருணையை வைப்பார்" என்றார். அதற்கு அவர் "இறைவன் என்றாலும் என்னிடம் கைகளோ அன்றி கால்களோ இருக்க வேண்டும். நானோ இடுப்பினால் அரங்கி நடப்பவன். இப்படி இருக்கும் போது அவரால் என்ன பலனை எனக்கு தர முடியும்" என்று கூறி வருந்தினார். அதற்கு சாயி அடியாரோ "முதலில் நீங்கள் சுவாமியிடம் செல்லுங்கள். பலன்னப் பின்பு வந்து கூறுங்கள்" என்றார்.

இறைவனே தன்னை அழைப்பதாக எண்ணிக் கொண்டு புட்டபர்த்தி புறப்பட்ட அவரை சுவாமி நேரடியாக தன் அறைக்கு அழைத்துச் சென்றார். சுவாமி முன்னால் நின்றவரை "உன்னால் என்ன இய லும்" என சத்ய சாயி பாபா வினவி னார். சுவாமிகேட்டதும் அவர் "சுவாமி" என கதறி கண்ணீர் விட்டார். கருணை படைத்த இறை வன் அவர் கண்ணீர் துடைத்த அரு கில் இருந்த தோலால் ஆன இசைக் கருவியில் அமரவிட்டு "தாளம்போடு" என உத்தரவிட்டார். வியந்து நின்றவரை தாணம் போடு என மீண்டும் கூறினார்.



உடனேயே அவர் தன் எலும்புகளற்ற தன் ஊனமான தசையால் மட்டும் ஆன தன் கால்ப் பகுதியினால் தோற்கருவியில் தாளம் போட்டார்.

இச் சம்பவம் அங்கிருந்த அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது மட்டுமன்றி சுவாமியின் கருணையும் வியக்கத் தக் கதாக இருந் தது.


இறைவனின் கருணையைப் பெற்ற இவ்அடியார் இன்று அமெரிக்காவில் இசைக் கருவிகள் இசைக் குழுக்களில் வாசிப்ப வராக ஒரு முழு மனிதராக வாழ்கின்றார்.

ஜெய் சாயிராம் யாதவன்

# பாகிஸ்தானில் பயங்கர விமான விபத்து; 152 பேர் உயிரிழந்திருக்கலாமென அச்சம்!

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் அருகே 152 பேர் பயணம் செய்த தனியார் விமானம் விபத்துக்குள்ளானது. இதில் விமானத்தில் பயணம் செய்த பயணிகள் அனைவரும் உயிரிழந் திருக்கக் கூடும் என அஞ்சப் படுகிறது.



கராச்சியில் இருந்து இஸ்லாமாபாத்துக்கு 152 பேருடன் சென்றுகொண்டிருந்த பயணிகள் விமானம் மார்கல்லா வனப்பகுதியில் இலங்கை நேரப்படி நேற்று காலை 8.15 மணியளவில் விபத்துக்குள்ளானது.

இஸ்லாமாபாத்தை ஒட்டிய மார்கல்லா மலைப்பகுதியில் விமானம் பறந்து கொண் டிருந்த போது கட்டுப்பாட்டு கோபுரத்திற்கும் விமானத்திற்கும் இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

அப்போது அந்தப் பகுதியில் கடுமையான மழை பெய்து கொண்டிருந்தது.

தொடர்பு துண்டிக்கப்பட்ட விமானம் வழி தெரியாமல் மலையில் மோதி நொருங்கியது.

தகவல் அறிந்ததும் மீட்பு ஹெலிகொப் டர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தனர்.



விமானம் நெருங்கிய பகுதியில் இருந்து வான் அளவுக்கு கரும்புகை எழுந்தது. மழை மற்றும் புகை மூட்டம் காரணமாக மீட்புப்படையினர் விபத்துப்பகுதிக்கு செல்வதில் சிரமம் ஏற்பட்டுள் ளது.

இதற்கிடையே இஸ்லாமபாத்தில் உள்ள அனைத்து மருத்துவ மனைகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

மேலும் இந்த விமானம் ஏர்ப்ளூ என்ற தனியார் நிறுவனத்திற்கு சொந்த மானது என்று அதிகாரிகள் தெரிவித் தனர்.

விபத்துக்குள்ளான விமானத்தில் 146 பயணிகள் மற்றும் விமானப் பணியாளர்கள் 6 பேர் உட்பட 152 பேர் இருந்தனர்.

என்று ப்ாகிஸ்தான் சிவில் விமானப் போக்குவரத்துத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை மோசமான வானிலை காரணமாக மீட்புப்பணிகள் மேற்கொள்வதில் இடர்பாடுகள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (6)

## ஈரானுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியம் விதித்துள்ள தடை தொடர்பில் ரஷ்யா அதிருப்தி

ஈரானுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்டுள்ள தடைகள் தொடர்பில் ரஷ்யா அதிருப்தி வெளியிட்டுள்ளது.

ஈரானுக்கு எதிராக ஐரோப்பிய ஒன்றியத்தினால் விதிக்கப்பட்ட தடைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல எனவும் இவ்வாறான தடைகளின் மூலம் ஈரானின் அணுத் திட்டங்களை கட்டுப்படுத்த முடியாது எனவும் அது தெரிவித்துள்ளது.

இதேவேளை ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்த நடவடிக்கை பெரும் ஏமாற்றத்தை அளிப்பதாக ஈரானிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

ஈரானுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் அமைப்பு கடந்த மாதம் தடை விதித்திருந்த போதிலும் அதற்கு ரஷ்யா எவ்வித எதிர்ப்பையும் வெளியிடவில்லை என்பது குறிப் பிடத்தக்கது.

எனினும் ஏற்கனவே ஐக்கிய நாடுகள் அமைப்பினால் ஈரானுக்கு எதிராக தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் ஐரோப்பிய ஒன்றியம் தன்னிச்சையாக தடைகளை விதிப்பது ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல எனவும் அணு வாயுதங்களை களைவதற் காக உலக நாடுகள் மேற்கொண்டு வரும் முனைப்புக்களுக்கு இவ்வாறான தன்னிச் சையான தீர்மானங்கள் இடையூறை ஏற்படுத்தும் எனவும் ரஷ்யா குறிப்பிட்டுள்ளது. (6)

## ஆப்கானிஸ்தானில் குண்டு வைத்து பஸ் தகர்ப்பு ; 20 பேர் பலி

ஆப்கானிஸ்தானில் நிம்ராஷ் மாகாணத்தில் டெலாறம் மாவட்டத்தில் நேற்று அதிகாலை ஒரு பஸ் சென்று கொண்டிருந்தது. அப்போது வீதியோரத்தில் வைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் பஸ் தூள் தூளாகக் தகர்ந்தது.மேலும் தீப்பிடித்து எரிந்தது. இதனால் அங்கு பதற்றமும் பரபரப்பும் ஏற்பட்டது.

இந்த விபத்தில் 20 பேர் அதே இடத்தில் உயிரிழந்தனர். 27 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்கள் அனைவரும் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றனர்.

இந்தத் தகவலை நிம்ரோஷ் மாகாண ஆளுநர் குலாம் தஸ்தகீர் ஆஷாத் தெரிவித்தார்.

சர்வதேச படை இராணுவ வீரர்களின் வாகனங்கள் அப் பகுதியை கடக்க இருந்தன. அவற்றின் மீது தாக்குதல் நடத்த தலிபான் தீவிரவாதிகள் வீதியோரம் குண்டுவைத்து இருந்தனர். எனவும் ஆனால் அந்த வாகனங்கள் செல்வதற்கு முன்பே குண்டு வெடித்து விட்டதில் பயணிகள் பஸ் சிக்கி கொண்டதாகக் குறிப்பிடப்படுகிறது. (6)

## வடகொரியா மீதான பொருளாதார தடைக்கு ஆசிய நாடுகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்

## அமெரிக்கா கோரிக்கை

(சியோல்)

வடகொரியாமீதான பொருளாதாரத்தடையை தீவிரமாக அமுல்படுத்த உள்ள நிலையில் அதற்கு சீனா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என அமெரிக்கா கோரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வட




கொரிய அணு ஆயுத தயாரிப்பில் ஈடுபடக் கூடாது என வற்புறுத்தி வந்த போதிலும் அந்த நாடு அதைக் கைவிடவில்லை.

இந்நிலையில் தென்கொரியாவுக்குச்சொந்தமான போர்க்கப்பல் ஒன்றை வட கொரியா தாக்கியழித்ததாக கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த அமெரிக்கா வடகொரியா மீது புதிதாக பொருளாதார தடையை அமுல் படுத்த நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்தத் தடையை அமெரிக்கா மட்டும் அமுல்படுத்தினால் போதாது. வடகொரியாவுடன் உறவு வைத்துள்ள பிற நாடுகளும் அமுல்படுத்த வேண்டும் என அமெரிக்கா எதிர்ப்பதாக வோஷிங்டனைச் சேர்ந்த தூதரக வட்டாரங்கள் தெரிவித்த தகவலை சுட்டிக் காட்டி சியோல் டெய்லி பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது.

வடகொரியாவின் அணு ஆயுதப் பெருக்க நடவடிக்கைகளில் தொடர்புடைய அமைப்புகள் மற்றும் வங்கிகள் நிறுவனங்களை அணுகி பொருளாதாரத்தடை அமுல்படுத்த உள்ளதை எடுத்துக்கூறி வடகொரியாவுக்கு எதிராக திருப்புவது அமெரிக்காவின் யோசனை என தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இதனிடையே வடகொரியாவுக்கு எதிரான பொருளாதாரத்தடை தொடர்பான வரைபு உத்தரவு தயாராகி வருவதாகவும் வழக்கறிஞர்கள் நிலையில் இது பற்றி விவாதம் நடத்தப்பட்டு வருவதாகவும் தெரியவருகிறது. (6)

## சீரற்ற காலநிலை காரணமாக சீனமக்கள் பெரும் பாதிப்பு

## இதுவரை 1250 பேர் பலி

சீனாவில் நிலவி வரும் மோசமான காலநிலையினால் பாரிய பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளதாகவும் மக்கள் பெரும் இன்னல்களை எதிர்நோக்கி வருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறிப்பாக கடும் மழை காரணமாக பல பிரதேசங்களில் மண்சரிவு ஏற்பட்டதினால் இதில் பலர் காணாமல் போயுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தென் சீனாவின் சிச்சுவான் கிராமம் மண்சரிவினால் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது.

மண்சரிவில் சிக்கியவர்களை மீட்கும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுவதோடு மழை வெள்ளம் மர்றம் மண்சரிவ காாணமாக பெரும் எண்ணிக்கையிலானவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை மத்திய சீனாவில் பாலம் ஒன்று இடிந்து வீழ்ந்ததில் 33 பேர் பரிதாபமாக கொல்லப்பட்டுள்ளனர்.

அண்மையில் சீனாவில் இடம்பெற்று வரும் சீரற்ற காலநிலையினால் மொத்தமாக ஆயிரத்து இருநூற்று ஐம்பது பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இக் காலநிலையினால் சீனாவிற்கு 22 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளது.

அநேகமான நதிகள் பெருக்கெடுத்து ஓடுவதனால் வெள்ளத்தை கட்டுப்படுத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாக தெரிய வருகிறகு. (6-2)

## 2050 ஆம் ஆண்டில் வடதுருவத்தில் பனிப்பாறைகள் அனைத்தும் உருகிவிடும்

## ரஷ்ய ஆராய்ச்சியாளர்கள் தகவல்

எதிர்வரும் 2050 ஆம் ஆண்டில் ஆர்ட்டிக் துருவப் பகுதியில் பனிக்கட்டிகள் இருக்காது என ரஷ்ய வானிலை ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளார். ரஷ்ய வானிலை ஆராய்ச்சி மையத்தின் இயக்குனர் அலெக் சாண்டர் ப்ரொலொவ் இது குறித்து கூறியதாவது, வட துருவமான ஆர்ட்டிக் பகுதியில் ஒரு கோடியே 10 இலட்சம் சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்கு பனிக்கட்டி இருந் தது.தற்போது ஒரு கோடியே 80 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவுக்கு பனிக்கட்டியின் அளவு குறைந்துள் ளது.வர்த்தகக் கப்பல்களின் போக்குவரத்து,விமானப் போக்குவரத்து உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் இப்பகுதி யில் ஹைட்ரோ கார்பன் அளவு கூடியதால், வெப்பம் அதிகரித்து பனிப்பாறை கள் உருகி விட் டன.இதே நிலை நீடித்தால் ,இன்னும் 30 அல்லது 40 ஆண்டுகளில் கோடை காலத்தில் இப்பகுதியில் பனிப்பாறைகளே இல்லாத நிலை ஏற்படும். ஆர்ட்டிக் துருவப் பகுதியை கண்காணிப்பதற்காகவே 10 ஆயிரம் கோடி ரூபாவில் விண்வெளித் திட்டம் ஒன்றை உருவாக்கியுள்ளோம். இதன் ஒரு கட்டமாக ஆர்ட்டிக் பகுதியில் சேரும் ஹைட்ரோ காபன் அளவை கணக்கிடுவது உட்பட பல்வேறு விடயங்களை ஆராய செயற்கைக் கோள்களை ஏவ திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக ரஷ்யா, அமெரிக்கா, கனடா, நோர்வே, டென்மார்க் ஆகிய நாடுகளுடன் விவாதித்து வருகிறோம் என அவர் தெரிவித்துள்ளார். (6)

# டெண்டுல்கர், சேவாக், ரெய்னா பிரகாசம்; இந்திய அணி கௌரவமான நிலையில்



சச்சின் டெண்டுல்கர்

(கொழும்பு)

சச்சின் டெண்டுல்கர், சேவாக், ரெய்னாவின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேரமுடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 382 ஓட்டங்களை எடுத்தது.

இலங்கைக்கு சுற்றுப் பயணம் வந்துள்ள இந்திய அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்டில் இலங்கை அணி வெற்றிபெற்று தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந் நிலையில் இரண்டாவது டெஸ்ட் கடந்த 26ஆம் திகதி கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 642 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இதில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 219 ஓட்டங்களையும் மஹேல ஜெயவர்த்தனா 174 ஓட்டங்களையும் பரணவிதான 100 ஓட்டங்களையும் சமரவீர ஆட்டமிழக்காமல் 74 டில்சான் 54 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் இஷாந்த் சர்மா, பிரக்ஜன் ஓஜா, ஹர்பஜன் சிங் மற்றும் சேவாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்ட நேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 95 ஓட்டங்களை எடுத்தது.

இந் நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு சேவாக்-முரளி விஜய் சிறப்பான இணைப்பை வழங்கினர்.

இதில் முரளி விஜய் 110 பந்துகளில் அரைச் சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி 150 ஓட்டங்களை எட்டியது.

எனினும் இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 165 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய வீரேந்திர சேவாக் 101 பந்துகளில் (15 பவுண்டரிகள் உட்பட) 99 ஓட்டங்களை எடுத்த போது ராண்டீப்பின் பந்துவீச்சில் விக்கெட் காப்பாளர் பிரசன்ன ஜெயவர்த்தனாவால் ஸ்ரெம் முறையில் ஆட்டமிழப்புச் செய்யப்பட்டது. இதன் மூலம் சேவாக் ஒரு ஓட்டத்தினால் சதம் பெறும் வாய்ப்பையிழந்தார்.

சேவாக்கை வீழ்த்தியதன் மூலம் ராண்டீவ் டெஸ்ட் அரங்கில் தனது முதலாவது விக்கெட்டை வீழ்த்தினார்.

அடுத்து டிராவிட் களமிறங்க மறுமுனையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் முரளிவிஜய் 124 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 58 ஓட்டங்களை எடுத்து மெண்டிஸின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து டெண்டுல்கர் களமிறங்கி நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் ராகுல் டிராவிட் 3 ஓட்டங்களுடன் ராண்டீவ்வின் பந்துவீச்சில் எல்.பி.டபிள்யூ. முறையில் ஆட்டமிழக்க இந்திய அணி 173 ஓட்டங்களை எடுத்து 3 விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது.

எனினும் 4ஆவது விக்கெட்டுக்காக இணைந்த டெண்டுல்கர்-லக்ஸ்மன் ஜோடி நிதானமான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளிக்க இந்திய அணி 200 ஓட்டங்களை எட்டியது.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்காக 68 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது வி.வி.எஸ்.லக்ஸ்மன் 29 ஓட்டங்களை எடுத்து மெண்டிஸின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ முறையில் ஆட்டமிழந்தார்.



முரளி விஜய் வீரேந்திர சேவாக்

இந் நிலையில் 5ஆவது விக்கெட்டுக்காக டெண்டுல்கருடன் இணைந்த டெஸ்ட் அறிமுக வீரர் சுரேஷ் ரெய்னா சிறப்பாகத்துடுப்பெடுத்தாடினார்.

இதில் சச்சின் டெண்டுல்கர் 115ஆவது பந்தில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்ய இந்திய அணி 250 ஓட்டங்களைக் கடந்தது.



சுராஜ் ராண்டீவ்

இந்த ஜோடியின் நம்பிக்கையான இணைப்பாட்டத்தின் மூலம் இந்திய அணி சரிவிலிருந்து மீண்டது.

இதில் அறிமுக வீரர் சுரேஷ் ரெய்னா 95 பந்துகளில் தனது முதலாவது போட்டியில் கன்னி அரைச்சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார்.

இந்த ஜோடியைப் பிரிக்க இலங்கை அணித்தலைவர் சங்கக்கார களத்தடுப்பில் பல வியூகங்களை வகுத்தும் பலனளிக்காமல் போனது.

இதில் சச்சின் டெண்டுல்கர் 167ஆவது பந்தில் டெஸ்ட் அரங்கில் தனது 48ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந் நிலையில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையிழந்து 382 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சச்சின் டெண்டுல்கர் 108 ஓட்டங்களையும் ரெய்னா 66 ஓட்டங்களையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் அஜந்த மெண்டிஸ், சுராஜ் ராண்டீவ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இப் போட்டியில் பொலோன் நிலையைத் தவிர்க்க வேண்டுமாயின் இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்கள் கைவசமுள்ள நிலையில் இன்னும் 60 ஓட்டங்களை எடுக்க வேண்டும்.

இப் போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# தடுத்துவைக்கப்பட்டுள்ள புலி முக்கியஸ்தர்கள் இருவரின் மனைவிகள் விதவையானது எவ்வாறு

## ஊடகவியலாளர்களின் கேள்விக்கு அமைச்சர் திண்டாட்டம்

(கொழும்பு)

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டதாக ஏற்கனவே அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் இரண்டு முக்கியஸ்தர்களின் மனைவிமார் விதவைகளானது எப்படி என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பி உள்ளனர்.

தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடத்தப்பட்ட விசேட ஊடகவியலாளர் மாநாட்டிலேயே ஊடகவியலாளர்கள் அமைச்சரவை பேச்சாளரும் பாதுகாப்பு விவகாரங்களுக்கான அரசாங்கத்தின் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெலவிடம் இக் கேள்வியை எழுப்பியிருந்தனர்.

இந்தக் கேள்வியால் அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல திக்குமுக்காடிப் போனார். தன்னை சுதாகரித்து கொண்ட அமைச்சர் அவ்வாறான அறிக்கை தொடர்பில் தனக்கு எதுவும் தெரியாது என்றும் தேடியறிந்து பதிலளிப்பதாகவும் கூறினார்.

ஊடகவியலாளர் மாநாட்டின் கேள்வி நேரத்தின் போது தமிழீழ விடுதலை புலிகளின் முக்கியஸ்தர்கள் இருவர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக ஏற்கனவே அரசாங்கத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது.


இவ்வாறானதொரு நிலையில் குறிப்பிட்ட இரண்டு புலி முக்கியஸ்தர்களின் மனைவிமார்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு அரசாங்கம் தயாராக இருப்பதாக உள்ளூர் ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது. அவ்வாறாயின் கைது செய்யப்பட்ட புலி முக்கியஸ்தர்கள் இருவரின் மனைவிகளும் விதவையானது எவ்வாறு என ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

கேள்வியை மீண்டும் ஒரு தடவை கேட்குமாறு ஊடகவியலாளர்களிடம் கேட்ட அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல ஊடக அறிக்கை தொடர்பில் தனக்கு எதுவுமே தெரியாதென்பதுடன் விடயங்களைத் தேடி அறிந்து பதில் அளிக்கிறேன் என்றார்.

முன்னதாக இம் மாதம் 10,11,12ஆம் திகதிகளில் முறையே யாழ்ப்பாணம், கிளி நொச்சி, வவுனியா ஆகிய இடங்களில் போரினால் விதவைகளானோரை சந்தித்த அமைச்சர் டியூ. குணசேகர அந்த விதவைகள் மத்தியிலேயே விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்களான பாலகுமாரன் மற்றும் யோகரட்ணம் யோகி ஆகியோரின் மனைவிமாரும் இருந்ததாக தெரிவித்திருந்தார்.

இவ்விரு விடுதலைப்புலி உறுப்பினர்களும் போரில் கொல்லப்பட்டு விட்டதாகவும் அமைச்சர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச-5)





ஊர்காவற்றுறை ஆதார வைத்திய சாலைக்கு விஜயம் செய்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், வைத்தியர் அருணா புண்ணியமூர்த்தியுடன் கலந்துரையாடுவதையும் வைத்திய சாலையிலுள்ள மருத்துவ உபகரணங்களை பார்வையிடுவதையும் படங்களில் காணலாம்.

# புலிகளுக்கு உதவிய குற்றத்தில் சிங்கள நபர்கள் இருவருக்கு 11 வருட சிறைத் தண்டனை!

முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீரவை படுகொலை செய்யவென தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினருக்குத் தகவல்களை வழங்கியிருந்தனர் என்கிற வழக்கில் குற்றவாளிகளாகக் காணப்பட்ட சிங்களவர்கள் இருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் தலா 11 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கி நேற்றுத் தீர்ப்பளித்தது.

மங்கள சமரவீரவை மாத்தறை அல்லது கொழும்பில் வைத்துப் படுகொலை செய்வதற்குத் தேவையான தகவல்களைச் சேகரித்துப் புலிகளுக்கு இவர்கள் வழங்கியிருந்தனர்,

புலிச் சந்தேக நபர்கள் பற்றிய தகவல்களைப் பொலிஸாருக்கு வெளிப்படுத்தத் தவறிவிட்டனர் ஆகியன இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள். கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ சாட்சிகள், சான்றுகள் ஆகியவற்றின் அடிப்படையில் இருவரையும் குற்றவாளிகளாகக் கண்டு இத் தீர்ப்பினை வழங்கினார். (ச-5)

# கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினர் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர். இந்த ஆர்ப்பாட்டமானது கோட்டைப் புகையிரத நிலையத்திற்கு முன்னால் நேற்று பிற்பகல் ஒரு மணியளவில் ஆரம்பமானது.

றுகுணுப் பல்கலைக்கழக மாணவனான சுசந்த அருண பண்டாரவின் மரணம் தொடர்பில் சம்பந்தப்பட்ட பொலிஸ் அதிகாரிகளைக் கைது செய்யுமாறு கோரியே இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தியதாக அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் உதுல் பிரேமரட்ண தெரிவித்தார்.

சுசந்த அருண பண்டாரவின் மரணம் தொடர்பான பொலிஸ் அதிகாரியைக் கைது செய்யுமாறு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கோஷம் எழுப்பினர்.

அத்துடன் உயிரிழந்த மாணவனின் உருவப் படத்தையும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் தாங்கியிருந்தனர். ஆர்ப்பாட்டத்திற்கு வந்த மாணவர்கள் புகையிரத நிலையத்திற்கு முன்னால் சத்தியாக்கிரகப் போராட்டத்தை நடத்தினர். (ச-5)

## வடக்கில் 792 ஆசிரியர்களுக்கு...

வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ.இராசையா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

வன்னி மாவட்டத்திலுள்ள கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா வடக்கு மற்றும் மடு கல்வி வலயப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களில் 232 பேருக்கு யாழ்ப்பாணம், வவுனியா மற்றும் மன்னார் மாவட்டப் பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 5 கல்வி வலயங்கள், வவுனியா தெற்கு, மன்னார் கல்வி வலயங்கள் ஆகியவற்றுக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் 560 ஆசிரியர்களுக்கு வன்னிக் கல்வி வலயங்களைச் சேர்ந்த பாடசாலைகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றங்கள் 3 ஆம் தவணைக்காகப் பாடசாலை ஆரம்பமாகும் போது அமுலுக்கு வரும். இவ்விடமாற்றம் தொடர்பான கடிதங்கள் இன்று உரிய ஆசிரியர்களுக்குத் தபால் மூலம் அனுப்பப்படும். இவ்வாறு வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்தார். (ச-5)

## நாட்டில்...

முதலாம் திகதியில் இருந்து ஒருவர் கூட டெங்கினால் இறக்கின்மையை அனுமதிக்க முடியாது. அவ்வாறு ஏதாவது நடந்தால் சம்பந்தப்பட்ட பிரதேச சபை உறுப் பினர்கள், கிராம சேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர் கள் போன்றவர்களை இறந்தவரின் வீட்டிற்கு அருகில் இருக்கும் மரம் ஒன்றில் கட்டிப் போட்டு விடுவேன்.

ஒவ்வொரு இடத்திலும் தூய்மை பேணப்பட வேண்டும். தூய்மையைப் பேணாதவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அதிகாரிகள் தயங்கக் கூடாது.

முதலாம் திகதியில் இருந்து இந் நடவடிக்கைகள் மும்முரமாக மேற்கொள்ளப்பட வேண்டும் என்றார். (ச-5)

## தமிழ்த்...

அனைத்துக் கட்சிகளும் ஒரு கோரிக்கைக் கடிதத்தை தமிழ்த் தேசியக் கூட் டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு அனுப்பி வைக்கவும் முடிபெடுக்கப்பட்டதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை தமிழ்க் கட்சிகளின் அடுத்த சந்திப்பை எதிர்வரும் 14 ஆம் திகதி மட்டக்களப்பில் நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகப் புளொட் அமைப்பின் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்துள்ளார். (ச-5)

## மருத்துவமாது தர்ஷிகாவின்...

கப்பட்ட சடலம் சீல் வைக்கப்பட்டுப் பலத்த பாதுகாப்புடன் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கடந்த 10 ஆம் திகதி வைத்தியசாலையில் தூக்கில் தொங்கிய நிலையில் தர்ஷிகாவின் உடல் மீட்கப்பட்டது. ஏற்கனவே இவரின் மரணப் பரிசோதனை யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டு அது ஒரு தற்கொலை மரணம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆனால் தர்ஷிகாவின் மரணத்தில் சந்தேகம் இருக்கிறது என்று அவரின் தாயார் இந் நீதிமன்றத்திற்கு முறையிட்டமையையடுத்தே மீண்டும் ஒரு மரணப் பரிசோதனைக்காக உத்தரவிடப்பட்டது. (ச-5,7,29)

## இராணுவத்தால் நிலங்கள்...

இராணுவத்தால் கையகப்படுத்தப்படும் இடங்களைச் சேர்ந்த மக்கள் வேறு இடங்களில் குடியேறுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த முடிபு தமது விருப்பத்திற்கு மாறாக எடுக்கப்பட்டிருப்பதாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மக்களில் ஒரு பகுதியினர் மீள்குடியேற்றத்திற்காக மனிக்பாம் இடைத்தங்கல் முகாமிலிருந்து அழைத்து வரப்பட்டு சாந்தபுரம் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

எனினும் தங்களை மீள்குடியேற்றம் செய்வதற்குப் பதிலாக் மீள்குடியேற அனுமதிக்கப்பட்டவர்களுக்கும் இப் போது அனுமதி மறுக்கப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றார்கள்.

முறிகண்டிப் பிரதேசத்தில் 4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பளவான நிலப் பகுதி அரசாங்கத்தின் தேவைக்காக எடுக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையடுத்து இந்தப் பிரதேசத்தைச் சொந்த இடமாகக் கொண்ட இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு வேறு இடத்தில் காணிகள் வழங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு முல்லைத்தீவு அரசாங்க அதிபர் ஒட்டிசுட்டான் பிரதேச செயலாளருக்கு பணித்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இராணுவம் கையகப்படுத்தவுள்ள இடங்களிலுள்ள மக்களை உடனடியாக அங்கிருந்து வெளியேறுமாறு இராணுவம் அறிவித்துள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை தாங்கள் வேறு இடங்களில் வசிப்பதை விட உயிர்துறப்பது மேலானது என மக்கள் கண்ணீர் மல்கத் தெரிவித்தனர். இதேவேளை இவ்விடயம் குறித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனாதிபதி மற்றும் அமைச்சர்கள் மத்தியில் பேச்சுக்கள் நடைபெற்றிருந்த போதிலும் அதனால் பலனேதும் ஏற்படவில்லை என மக்கள் கூறினர். (ச-5)



மாபெரும் ஆடித் தள்ளுபடி அதிரடி விலைக் கழிவுடன் ஜூலை 26 முதல் யாழ்ப்பாணம் கலட்டிச் சந்தியில்
AHIEZER SUPPLIERS இல்
கண்கவர் நிறங்களில் India, Malaysia விலிருந்து
நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட அதிநவீன மற்றும் சாதாரண
Commode (கொமேட்) வகைகள்
Squatting Pan வகைகள் மற்றும்
S-LON PE+ தண்ணீர் தாங்கிகள்
முதலானவை விசேட விலைக் கழிவுடன்
நியாய விலையில்
PVC குழாய்களும் அதன் பொருத்துக்களும்
மின்சார உபகரணங்கள்
Causeway Paints
காவி வகைகள்
Bath Room Titles
All kind of Large Diameaters
PVC Pipe & Fittings Available
Import PVC Fittings
முந்திக் கொள்ளுங்கள் கையிருப்பு உள்ளவரை மட்டுமே
விரையுங்கள்...
AHIEZER SUPPLIERS
289, பிறவுண் வீதி, கலட்டிச்சந்தி, யாழ்ப்பாணம்.
T.P. 021 510 0700
காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை
(C-764)



European College of Higher Studies
தேவை
நன்றாக ஆங்கிலம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர்கள் தேவை.
அலுவலகப் பணிக்கு பெண் வேலையாளர் உடனடியாகத் தேவை. (கணனி அறிவுடைய)
தொடர்புகளுக்கு:-
021 373 4747 / 077 3537378
(2039)

Diploma in Digital Video Production
3 Months
Advanced Dip. in Digital Pre-Press
100% செயன்முறைப் பயிற்சி
இலவச பாடநூல்கள்
3 Months
ASIAN COMPUTERS
2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-3734088
230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-3213390
(2034)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.07.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.